

# அறநெறி

6 ஆவது ஆண்டு நினைவுச் சிறப்புமலர்

2005



தலையாழி ஸ்ரீஞானவைரவர் ஆலய அறநெறிப்பாடசாலை,
கொக்குவில்.

உ

சிவமயம்

# அறநெறி

2005

*மலர் ஆசிரியர்*

*திருமதி.கு.ஷண்முகடாஸ் B.A.Dip.in.Ed*


தலையாழி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அறநெறிப் பாடசாலை

கொக்குவில்,

யாழ்ப்பாணம்,

ஸ்ரீ லங்கா.

# சுவாமி ஆத்மகனானந்தாஜியின் அருளாசி

தலைவர். இராமகிருஷ்ணமடம்
இலங்கைக்கிளை.

கொக்குவில் பகுதியில் இயங்கும் தலையாழி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் அலய அறநெறிப் பாடசாலையின் ஆறாவது ஆண்டு பரிசளிப்பு விழாவின் போது வெளியிடப்படவுள்ள மலருக்கு இவ்வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

உலக மக்களிடம் இன்று பெரும்பாலும் உலகியல் அறிவைப் பெருக்கிக் கொள்ளும் ஆர்வமும், வேகமும் காணப்படுகிறது. உலகியல் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதில் ஐயமில்லை. ஆனால் அதே அளவிற்கு சிறந்த ஒழுக்கத்தையும் சமயப் பண்பாட்டையும் வளர்க்கத் தவறினால் என்ன நேரிடும் என்பதற்கு, இன்று சமுதாயத்தில் நிலவும் குழப்பமும், அமைதியின்மையுமே போதிய சாட்சிகளாகும். தங்கள் குழந்தைகளின் எதிர்காலம் அமைதியும் சுபீட்சமும் நிறைந்ததாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கும் பெற்றார். அத்தகைய ஒழுக்கம் நிறைந்த சமய வாழ்க்கைவாழ்வதற்கான வாய்ப்பையும், பயிற்சியையும் வழங்கவென இயங்கும் அறநெறிப் பாடசாலைக்குத் தங்கள் குழந்தைகளைத் தவறாமல் ஒவ்வொரு ஞாயிறுதோறும் அனுப்பிவைக்க வேண்டும். அங்கு அவர்கள் பெறும் பயிற்சியை வீட்டிலும் கடைப்பிடிக்க அவர்களுக்குப் பெற்றார் ஊக்கமளிக்க வேண்டும்.

தலையாழி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அறநெறிப்பாடசாலையின் அதிபர் ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு எங்கள் மனம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். பரிசளிப்பு விழா சிறப்புடன் அமைய வாழ்த்துகிறோம்.

### முதல்தர குரு

வைத்தியர்கள் முதல் தரத்தினர், இரண்டாம் தரத்தினர், மூன்றாம் தரத்தினர் என மூவகைப்படுவர். மூன்றாம் தர வைத்தியர் நோயாளியின் நாடியைச் சோதித்துப் பார்த்து ஏதோ ஒரு குறிப்பிட்ட மருந்தை உட்கொள்ளும்படி கூறிச் சென்று விடுகின்றார். அம் மருந்தை நோயாளி உட் கொண்டாரா இல்லையா என்பதைப் பற்றி அவர் கவலைப்படுவதில்லை. இரண்டாந்தர வைத்தியர் அம்மருந்தை உட் கொள்வதால் நோய் தீரும். என்று நோயாளியின் மனத்தில் படும்படி சொல்லி மேலும் அவன் மருந்தை எப்படியாவது உட்கொள்ளும் உபாயத்தைக் கையாளு கின்றார். ஆனால் முதல் தரமான வைத்தியரோ மருந்தை உட்கொள்ள மாட்டேன் எனப் பிடிவாதம் பிடிக்கும் நோயாளியின் மார்பில் தம் கையை ஊன்றியும் கஷ்டப்படுத்தியும் அவரது தொண்டையிற் செலுத்துகின்றார். இங்ஙனமே தம் சீடனுக்கு உபதேசம் மாத்திரம் செய்த விட்டுப் பின் அவனைக் கவனியாதவர் குருமாரில் மூன்றாம் தரத்தினர் ஆவர். சீடன் உள்ளத்தில் நன்கு பதியும் வரை பல தடவைகள் உபதேசம் செய்து அவனது ஆத்ம நலத்தில் தனக்கு அக்கறை இருப்பதை அவன் உணரும்படியும் செய்யும் குரு இரண்டாவது தரத்தினர் ஆவர். தான் சொல்வதைக் கேட்காமலும், உபதேசங்களை மேற் கொள்ளாமலும் இருக்கும் சீடனை வற்புறுத்தித் தமக்குப் பணிய வைத்துப் போதிக்கும் குருவே முதல் தரத்தினர்.

~ ஒரு ஞானி ~

# "சிவமணம் கமழும் மலரை மகிழ்வுடன் வாழ்த்துகிறேன்."

*சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் அவர்கள்*
*உதவிப்பணிப்பாளர்*
*இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.*
*யாழ் மாவட்டம்.*

ஒரு தேசத்தின் உயர்நத செல்வம் சிறுவர்களேயாகும் பாடசாலைக்குச்சென்று முறைசார் கல்வியைப் பெறும் இன்றைய மாணவர்களே நாளைய சமுதாயத்தின் தலைவர்களாக விளங்கப் போகிறார்கள். "ஏடு தூக்கிப் பள்ளியில் இன்று பயிலும் சிறுவரே நாடு காக்கும் தலைவராய் நாளை விளங்கப் போகிறார்". என்ற குழந்தைக் கவிஞர் அழவள்ளியப்பாவின் பாடல் இதனைக் குறிப்பிடுகின்றது. வளரும் சிறார்களிடம் உடற்பலம், மனோபலம் ஆகியவற்றை வளர்ப்பதில் அக்கறை எடுப்பதுபோல அவர்களுடைய ஆத்ம பலமும் சிறப்புற்று வளர பங்காற்ற வேண்டிய பாரிய பொறுப்பு சமய நிறுவனங்களைச் சார்ந்ததாகக் காணப்படுகின்றது. உடற்பலம் மட்டுமிருந்தால் அது மிருக பலமாக மாறி விடும். நினைத்த காரியங்களைச் சீராகச் செய்து முடிப்பதற்கு தளர்வறியா மனநிலை வேண்டும். ஆனால் உடற்பலமும் மனோபலமும் சரியாக இயங்குவதற்கு இறையருளால் கிடைக்கின்ற ஆத்மபலமும் அவசியமாகும். சிறியவயதில் ஏற்படுகின்ற சிந்தனைகளே பெரியவர்களான பின்பும் கொப்பியைப் பார்க்வும் அவர்களைத் தொடர்கிறது. பிஞ்சு உள்ளங்களில் நஞ்சு விதைளை விதைக்காமல் நல்லவற்றை விதைத்து விடவேண்டும். ஒரு பாரிய பொறுப்பு அலயங்களையும்சமய நிறுவனங்களையும் சமயத் தலைவர்களையும் சார்ந்ததாகவே காணப்படுகின்றது.

தனிமனித வாழ்வில் ஒழுக்கத்தைப் பேணாதவர்கள் சமயக் கோவிலுக்குள் நுழைய முடியாதென்பதே பண்டிதமணி போன்ற அறிஞர் பெருமக்களின் கருத்து ஆகும். சுயகட்டுப்பாடும் ஒழுக்கமும் ஏற்பட்டு விட்டால் ஒவ்வொரு தனிமனிதனும் புனிதத்தன்மை பெற்று விடுவான். அற விழுமியங்களை மதித்து தர்மத்தைப்பேணி வாழ்பவர்களை, அவர்கள் வாழ்ந்த தர்மநெறி என்றுமே காப்பாற்றும். "தர்மத்தைக் காத்தவனை அது காக்கும். கொன்றவனை அது கொல்லும்" என்றே தர்மசாஸ்திரங்கள் குறிப்பிடுகின்றன.

அரசாங்கம் சகல சமயத்தைச் சார்ந்த மாணவர்களுக்கும் அவர்கள் அறவிழுமியங்களைப் பேணி வாழ வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு அறநெறிப் பாடசாலைகளை நடாத்தி வருகின்றது. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மேற்பார்வையில் இந்து அறநெறிப் பாடசாலைகள் ஈழமணித்திருநாடு முழுவதும் பரவலாக நடைபெற்று வருகின்றன. யாழ் மாவட்டத்தில் சிறப்பாக இயங்கும்.

அறநெறிப் பாடசாலைகளில் கொக்குவில் தலையாழி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அறநெறிப் பாடசாலையும் ஒன்றாகும். இந்த அறநெறிப் பாடசாலையை நடாத்துபவர்கள் மாணவர்களின் நலனில் அக்கறை கொண்டு அவர்களுடைய ஆற்றல்களை வெளிப்படுத்தும் வண்ணம் பல செயற்பாடுகளைச் செய்து வருகின்றார்கள். அறநெறிப் பாடசாலையின் ஆறாவது ஆண்டு பரிசளிப்பு விழாவில் மாணவர்களின் ஆக்கங்களையும் தங்கள் நிறுவனத்தின் ஆறாண்டு சாதனைகளையும் வெளிப்படுத்தும் முகமாக மலரினை வெளியிடுகின்றார்கள்.

சிவமணம் கமழும் இந்த மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் நான் மிகவும் மகிழ்வடைகின்றேன். அறநெறிப் பாடசாலையை நல்ல முறையில் இயக்குகின்ற நிர்வாகிகள், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய அனைவருக்கும் எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானின் திருவருள் பூரணமாகக்கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

# "தர்மம் தழைத்த பூமியின் அறப்பள்ளி வளர வாழ்த்துகிறேன்"

திரு. ஆனந்தகுமாரராஜா (லண்டன்)
(ஞானவைரவர் ஆலய உரிமையாளர்.
ஆலய பரிபாலன சபைப் போஷகர்)

தலையாழி ஞானவைரவர் ஆலய அறநெறிப்பாடசாலை அதன் ஆறாவது அகவையைப்பூர்த்தி செய்வதை முன்னிட்டு வெளிவரும் இம் மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் நான் பெருமையடைகின்றேன்.

இந்துசமய வளர்ச்சியிலும் கல்வி வளர்ச்சியிலும் தர்மகாரிய செயற்பாடுகளிலும் யாழ்குடாநாட்டில் முன்னணியில் நின்று புகழ் பெற்ற ஒரு கிராமம் தலையாழி.

இங்கு வாழ்ந்த முதாதையர்கள் இப் பணிகளைத் தம் வாழ்வியலாகக் கொண்டவர்கள். அவர்களில் குறிப்பிடப்பட வேண்டிய பெரியார் இலங்கைச் சட்டநிருபணசபை உறுப்பினராக இருந்த மதிப்புக்குரிய சபாபதிப் பிள்ளை அவர்கள். இவர் அறப்பணி இந்துக்கல்லூரிகளை நிறுவுவித்தல் இந்து பத்திரிகை நடாத்தல், ஆலயப்பணி என விரிந்து பரந்தமைந்தது. இப் பணிகளை இக் கிராமத்தவர்களான இவர் உறவினர்கள் தொடர்ந்தனர்.

இந்த வகையில் இப்பாரம்பரிய வழிவந்த ஞான வைரவர் ஆலய அறநெறிப் பாடசாலை அதிபர் திருமதி. குணமனி சண்முகடாஸ் அவரின் சகோதரர் பெரியார் சபாபதிப்பிள்ளையின் இல்லத்தில் ஆரம்பித்து வைத்த இப்பாடசாலையை ஆறு வருடங்களாக நடாத்தி வருவது பெருமைக்குரிய விடயமாகும். இவர் பல்லாண்டு வாழ்ந்து இப்பாடசாலையை வள்ர்ச்சிபெறச் செய்ய வேண்டும் என வாழ்த்துகிறேன். இச்சந்தர்ப்பத்தில் இப்பாடசாலை மேன்மேலும் வளர்ச்சிபெற எனது ஆதரவும் ஆசியும் உண்டு எனக் கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.



ஏப்போதும் இறைவனது திருப்பெயரையும் புகழையும் பாட வேண்டும். அதற்குப் போதிய நேரம் கிடைக்காவிட்டால் காலையிலும், மாலையிலும் கைகளைத் தாளமிட்டவாறே முழுமனத்துடன் பஜனையில் ஈடுபடுவது நல்லது.

-பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர்.

# மெய்ஞ்ஞான வளர்ச்சிக்கு அடித்தளமிடும் அறப்பள்ளியை போற்றுவோம்

வைத்தியகலாநிதி க.சிவபாலன்
பீடாதிபதி, யாழ்க்கலைக்கழக மருத்துவ பீடம்.

கொக்குவில் – தலையாழி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் கோவில் அறநெறிப் பாடசாலையின் வெளியீடான இம்மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெரு மகிழ்வடைகின்றேன். அஞ்ஞானமும் விஞ்ஞானமும் போட்டி போட்டு வளரும் இக்காலத்தில் மெய்ஞ்ஞான வளர்ச்சிக்காக அடித்தளமிடும் அறநெறிப் பாடசாலைகளின் சேவையை ஒவ்வொரு சைவரும் போற்றுவர் என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் முன்மாதிரியைப் பின்பற்றிப் பல ஆலய உற்சவங்களிலும் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட மக்கள் கூட்டம் கூட்டமாக அமர்ந்து கேட்ட காலத்தில், போர் அனர்த்தங்கள் இடப்பெயர்வுகள் இல்லாத காலத்தில் எமது பண்பாடும் கலை கலாசாரமும் சிறந்தோங்கின. இன்றைய நிலையில் எல்லாமே மாறிவிட்டன. பிள்ளைகளுக்கு ரியூசன், பெற்றோருக்கு உத்தியோகம் அல்லது தொலைக்காட்சி நாடகம். ஒருவருக்கும் சமயச் செயற்பாடுகளில் ஈடுபட நேரமுமில்லை, மனமுமில்லை. ஊர்க்கட்டுமானம் சிதைந்து, புதிய சூழலில் புதிய மனிதர் மத்தியில் பிள்ளைகளைக் கண்காணிக்க யாருமில்லை. சரியான வழிகாட்டலின்றி இன்றைய இளைய சமூகம் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என திசைமாறித் தறிகெட்டுப் போகும் ஆபத்துநிலை தோன்றியுள்ளது.

இந்நிலையில் எமது எதிர்கால சந்ததியை சரியான வழியில் செலுத்தும் பெரும் பொறுப்பு அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களிடம் விடப்பட்டுள்ளது, எமது பிள்ளைகளுக்கு அறநெறியைப் போதிப்பதுடன் ஒழுக்கத்தையும் இப்பாடசாலைகள் போதிக்க வேண்டும்.

இவ்வகையில் முன்மாதிரியாக மிகவும் சிரமங்களின் மத்தியில் இப்பாடசாலையைக் கட்டிக்காத்துவரும் திருமதி. கு.ஷண்முகடாஸ் அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர். இப்பாடசாலை மென்மேலும் சிறந்தோங்க எல்லாம் வல்லஸ்ரீ ஞானவைரவப்பெருமானைப் பிராத்திக்கின்றேன்.

> எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை ஒருவாக்குமோ. மனவலிமையை வளர்க்கச் செய்யுமோ. விரிந்த அறிவைத் தருமோ. ஒருவனைத் தன்னுடைய சுய வலிமையைக் கொண்டு நிற்கச் செய்யுமோ அத்தகைய கல்விதான் நமக்குத் தேவை.
>
> சுவாமி விவேகானந்தர்.

# நற்பணி தொடர வாழ்த்துகின்றேன்

திரு. அ.இராமநாதன்- ஜே.பி,
ஆலய முன்னாள் தலைவர்.

அறநெறி அருகிவரும் வேளையில் அறநெறிப்பாடசாலைகள் நாடெங்கும் குறிப்பாக வடக்கு கிழக்கில் திறம்பட செயலாற்றிக் கொண்டிருப்பது போற்றத்தக்க விடயமாகும். இது போன்று பெரும்பான்மை மக்கள் வசிக்கும் பகுதிகளில் தர்மநெறியைப் போதிக்கும் பாடசாலைகள் ஆங்காங்கே செயற்படுவது நாம் அறிந்தவையே.

சமய நெறியை மக்கள் புறக்கணித்து நடப்பதால் தான் நாட்டில் அநீதியும் அராஜகமும் தாண்டவம் ஆடுகின்றன. சமய வாழ்வை ஒருவர் கடைப்பிடிப்பாரெனின் அவரின் வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக அமையும் .அதர்மம் தலை காக்கும் என்றும், மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம் என்றும் எங்கள் சமய குரவர்கள் கூறியுள்ளார்கள்.

இந்த வகையிலே தலையாழி ஞானவைரவர் ஆலய அறநெறிப் பாடசாலை அளப்பரிய சேவையாற்றி வருவது போற்றத்தக்கதாகும். இதை நடாத்தி வரும் புகழ்பூத்த ஆசிரியை திருமதி குணமணி சுஷண்முகடாஸ் சைவத்தையும் தமிழையும் ஆதரித்து செயல்படுவது மெச்சத்தக்கதாகும்.

கற்றல் கற்பித்தலில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்திருப்பது நாமெல்லாரும் செய்த பாக்கியமாகும். அவரின் நற்பணி தொடர வேண்டுமென எல்லாம் வல்ல வைரவப்பெருமானை இறைஞ்சி வாழ்த்துகிறேன்.

# அறவழிச் சமுதாயம் உருவாகவேண்டும்

திரு.வி.சுந்தரலிங்கம் - ஜே.பி,
கிராம அலுவலர்.பெற்றோர் ஆசிரிய சங்கத்தலைவர்

ஆரிது அரிது மானிடர் ஆதல் அரிது' என முத்தமிழ் மூதாட்டி ஔவையார் குறிப்பிட்டுள்ளார். இவ்வரிய மானிடப் பிறவியைப் பெற்றவர்கள் யாவரும் மானிடராக வாழ்கிறாரா என்றால் அதுதான் இல்லை. அறம் செய விரும்பி பலதரப்பட்ட அறச் செயல்களைச் செய்து வாழ்பவனே மனிதன் எனும் சொல்வுக்கு இலக்கணமாகின்றான்.

பஞ்சமாபாதகங்களை விடுத்து அறநெறிப்படி வாழும் ஒரு சமுதாயமாக மனிதகுலம் மாறவேண்டும். இதற்கு அறநெறிக்கல்வி மிக அவசியம். இன்று இக்கல்வி நாட்டின் வருங்காலத் தலைவர்களான சிறார்களுக்கு வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் தலையாழி ஞானவைரவர் ஆலய அறநெறிப்பாடசாலையின் போதனைகள் அங்கு பயிலும் சிறார்களை ஒழுக்க சீலர்களாகவும் இறையுணர்வுடன் இயங்குபவர்களாகவும் உருவாக்கி வருகின்றது என்பது மகிழ்ச்சிக்குரியதே. இப்பாடசாலையில் பலதரப்பட்ட சேவைகள் மென்மேலும் வளர்ச்சி பெற எல்லாம் வல்ல ஞானவைரவப் பெருமான் அருள் புரிய வேண்டும் எனப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

# ஆயகலைகள் அறுபத்து நான்கும் வளர்க!

**31.01.2000ம் திகதி "வலம்புரி" ஆசிரியதலையங்கம் இது.**

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றனர் ஆன்றோர். இன்னல் சூழ்ந்த வேளை இறைவனை நாடல் சகஜம். துன்பம் போக்குதல் மட்டுமன்றி கலைமயமாகவும், அறிவியல் சுரங்கமாகவும், ஞான வெள்ளத்தின் நிறைவிடமாகவும், ஆலயங்கள் அமைந்தன அன்று. அவற்றை உணர்ந்த எழுச்சி நிலையொன்று இன்று மலரத் தொடங்கியுள்ளது.

கொக்குவில் தலையாழியில் ஒரு அறநெறிப் பாடசாலை, ஞானவைரவர் அருட்பார்வையில் மலர்ந்தது. பரிசளிப்பு வைபவத்திற்கு நல்லூர் பிரதேச செயலர் செந்தில் நந்தனன் பிரதம அதிதி. அந்த முதுமை பெற்ற இளைஞரின் சமய பக்தியும், அடக்கமும், இறைநகர் பணிவும், மக்கள் மய எளிமையும், உள்ளத்தை ஈர்த்தன.

எல்லாவற்றுக்கும் மேலாக அறநெறிப்பள்ளியின் முதல்வர் திருவாட்டி சண்முகதாஸ் பாராட்டப்பட வேண்டியவர்கள் நுண் மதிப்பெண்மை துலங்க துடிப்பாக மலரும் மொட்டுக்களாய் சிறார்களை அணைத்து அணைக்கின்ற பக்குவம் போற்றுதற்குரியது. அன்னாரின் ஆசிரிய குழாத்தின் ஒத்துழைப்பும், ஊராரின் உந்து சக்தியும், அறநெறி தழைக்க வகை செய்வது பாராட்டுக்குரியதே.

இருதசாப்தத்திற்கு மேலாக மண்ணின் அவலமும், மறச் செயல்களும், அறச்செயலை விழுங்கியதால் விளைந்தவையே. தானங்களிற் சிறந்த நிதானத்தை இழந்ததால் நிம்மதி குலையும். நிஜவாழ்வு தளம்பும். துயர்தளுவும். ஊழ்வினையோவென உள்ளம்வேகும். முற்பகல் செய்வது விளைவது பிற்பகலிற்தானே.

அந்தச்சூழலை எண்ணி குறித்த பரிசளிப்பு விழா வினைப்பார்க்கின்ற போது ஒரு திருப்புமுனையில் வந்து நிற்கிறோம் என்ற நிம்மதிப் பெருமூச்சு தோன்றுகிறது. தொண்ணூறிற்கு மேற்பட்ட வளரும் மொட்டுக்கள் தங்கப்பதக்கங்களுடன் தங்கமாக விளைய விளைந்தமை மகிழ்ச்சி தருவதாகும். ஆயகலைகள் அறுபத்து நான்கும் வளர்க.

எம் அறப்பணியைப் பாராட்டி வாழ்த்துகின்றார் கௌரவ விருந்தினராக வருகை தந்து உரையாற்றிய வலம்புரி

**ஆசிரியர், ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர்**

**கோ.சி. வேலாயுதம் அவர்கள்.**

# மலர் ஆசிரியரின் மனதிலிருந்து .....



~ திருமதி. கு . ஷண்முகடாஸ்
~ B.A.Dip.in.Ed. (அதிபர்)

பேரன்பர்களே என் பணிவன்பான வணக்கங்கள்

தலையாழி ஞானவைரவர் ஆலய அறநெறிப் பாடசாலை தனது ஆறாவது அகவை நிறைவையொட்டி வெளியிடும் இம்மலர் பற்றி உங்களிடம் பேசுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இம்மலர் மணம் வீசும் மலராக உங்கள் முன் மலர ஞானவைரவப் பெருமான் அருள்புரிவார் என்ற உறுதியான நம்பிக்கையோடு ஆரம்பித்த இப்பணிக்கு முன்னின்று எம்பெருமான் காட்டிய வழி திண்ணிய மனதைத் தந்து எண்ணிய இலக்கை அடைய வைத்தது.

இம் மலரை மனநிறைவோடு ஆசியுரை வழங்கி நிறைவூட்டிச் சிறப்பித்த கொழும்பு இராமகிருஷ்ண மடத்தலைவர் சுவாமிஜி ஆத்மகனானந்தாஜி அவர்கட்கு என் வணக்கத்துடன் கூடிய நன்றியை நவில்கிறேன். வாழ்த்துரை, பாராட்டுரைகள் வழங்கிய இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு.சி.சிவமகாலிங்கம் அவர்கட்கும் யாழ் மருத்துவ பீடாதிபதி, ஆலய உரிமையாளர், நிர்வாகசபைப்போகஷகர், முன்னாள் தலைவர், பாடசாலைப் பெற்றோர், ஆசிரியர் சங்கத் தலைவர் ஆகியோருக்கும் என் நன்றியைத் தெரிவிக்கவேண்டிய கடப்பாடுடையேன்.

இம்மலர் வளர்ச்சியுற ஆக்கங்களைத் தந்து உதவியவர்களுக்கும் மலராக்கத்துக்கு எனக்குத் துணை நின்றுதவிய அறப்பள்ளி ஆசிரியைகள் செல்வி வ.செல்வத்துரை செல்வி பு.மதிவதனி, செல்வி எஸ்.அருட்செல்வி ஆகியோருக்கும் நான் நன்றி தெரிவிக்காவிடில் நன்றி கொன்ற பாவத்துக்குள்ளாவேன்.

எல்லாவற்றுக்கும் மேலாக கவர்ச்சியாகவும் அழகாகவும் மனவிருப்போடும் இம் மலரை அச்சிட்டு உதவிய யாகினி பிறிண்டேஸ்க்கும் எனது உள்ளம் நிறைந்த நன்றிகள்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" எனக் கூறும் திருமந்திரத்தை என் சிந்தையில் தெய்வ வாக்காகக் கொண்டு ஞானவைரவப் பெருமான் அருளாட்சியில் அவனுறை ஆலயத்தின் வடக்கு வீதியில் அவன் பெயர் தாங்கி வளர்ந்துவரும் அறப்பள்ளியின் ஆறாவதாண்டு நிறைவை முன்னிட்டு வெளிவரும் இம் மலரை அவன் சேவடிக்குக் காணிக்கையாக்கி அரும்பணியாம் அறப்பணி செய்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ விரும்பும் எல்லோருக்கும் இம்மலர் இனிது பயன்பட அவனருளை வேண்டி அவன் பாதம் பணிந்து நிற்கிறேன்.

# அறநெறிப் போதனை பற்றிய சிந்தனைகள்.



திருமதி பூமணி குலசிங்கம்
முன்னாள் விரிவுரையாளர்
கொழும்புப் பல்கலைக்கழகம்.

இன்றைய சிறுவர்களே நாளைய சமூகத்தினைக் கட்டியாள்பவர்கள். எனவே இவர்களைத் தகுந்த முறையில் பராமரித்துக்காத்து, நற்பண்புகளைக் கொண்ட பிரஜையாக்குவது மூத்த சமூகத்தின் பொறுப்பும் கடமையுமாகும்.

**பாடசாலையின் தோற்றம்.**

எமது முறைசார் கல்வித்திட்டத்தில் சுமார் 50 ஆண்டுகளாகச் சமயம் ஒரு கட்டாய பாடமாக விளங்கி வருகிறது. அத்துடன் பலதிறப்பட்ட சமய நிறுவனங்களும் அமைப்புக்களும் தொழிற்பட்டு வருகின்றன. இருந்தும் எமது சமூகத்தில், மக்கள் மத்தியில் நெறி முறையான வாழ்க்கைப் பண்புகள் மிளிர்வதைக் காண்பதரிது. இக் குறைபாட்டை நீக்கும் பொருட்டு 10 ஆண்டுகளுக்கு முன் இந்து கலாசார அமைச்சு அறநெறிப் பாடசாலைத் திட்டத்தினைத் தொடங்கியது. இம்முறைமை சமய வாழ்வினை மையமாகக் கொண்ட பயிற்சியை செயல் அனுபவங்களாகக் கொடுத்து அகவயமான மாற்றங்களைத் தோற்றுவிப்பதனையே நோக்கமாகக் கொண்டது. இதன்மூலம் நெறிமுறையான வாழ்விற்கு அத்திவாரம் இடப்படும் என்ற சிந்தனையும் இருந்தது. இந்த நோக்கங்களை அடைவதற்கு இந்து கலாசார அமைச்சு ஒரு சிறந்த பாடத்திட்டத்தினை வகுத்தது. மேலும் பாட நூல்களையும், இசைக் கருவிகளையும், காலத்திற்குக் காலம் இலவசமாக விநியோகித்தது. அத்தோடு நில்லாது சங்கீத வகுப்புக்களையும் ஆசிரியர்களுக்கான பயிற்சிகளையும் ஒழுங்கு செய்தது. அறநெறிப் பாடசாலைகளை அமைத்து நடத்தும் பொறுப்பு சமய நிறுவனங்களுக்கும் ஆலய நிர்வாகிகளுக்கும் சார்ந்தது. இப் பாடசாலைகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டன.

**சில பிரச்சினைகள்**

வாரத்தில் ஒரு தினம் இயங்கும் இப் பாடசாலைகள் சிறுவர்களுக்கு ஒரு பயிற்சிக் கூடமாக அமையும் என்று கருதப்பட்டது. இங்கு நிலவும் நெருங்கிய இடைத்தாக்கம் (Inter Personal Interaction) அன்பான உறவுகள், நற்பண்புகளையும், மனப்பாங்கு விழுமியங்களையும் சிறார் மனங்களில் பதிய வழிவகுத்தது. பண்பும், அறமும் சேர்ந்த வாழ்விற்கு அடிகோலும் என்று கருதப்பட்டது.சமயம் என்னும் பதம் செம்மைப்படுதல் என்ற பொருள் கொண்டது.

எனவே பயிற்சி பெறும் சிறார்களின் உள்ளங்களைத் தூய்மைப்படுத்தி அவர்களது சிந்தனையில், பேச்சில், செயலில், நடத்தையில், மனப்பாங்கு விழுமியங்களில் சமூக நலனைக் கருதும் இயல்புகளை மிளிரச் செய்வதே பிரதான நோக்கமாகியது.

பிறவிகளுள் மேலான பிறவியான மானிடப் பிறவியை எடுத்த மனிதன் இப்பிறவியைப் பயன்படுத்தி,மனப்பக்குவத்தைப் பெற்று, சமூக மக்களுடன் ஒருங்கிணைந்து கூடி வாழ்தல் அவசியமாகும். மனிதன் பக்குவமடைவதற்கென சிந்திக்கும் ஆற்றலும், தொடர்புபடுவதற்கு மொழியும் ஒரு கலாசார பண்பாடாகிய சமயத்தையும் உடையவன். சமூக இடைத் தாக்கத்தினால் பெறும் அனுபவங்கள் மனிதனைச் செம்மைப்படுத்த வல்லவை. நூல் அறிவினாலோ, போதனை, விரிவுரை, குறிப்பெழுதுதல் என்பவற்றினாலோ குறிக்கோள்களை அடையமுடியாது. சமய அறிவு அறிவுபூர்வமானதல்ல அனுபவத்தால் உணர்ந்து விளங்கிச் செயற்படும் ஒரு நெறி! இதனைப் பரீட்சைகளால் அளவிட முடியாது. நடத்தை, குணப்பண்புகள் என்பவற்றின் அடிப்படையிலேயே கணிக்கமுடியும்.

ஏமது பாடத்திட்டத்தில் இதற்கென முறைசாராக் கற்றல் - கற்பித்தல் யுத்திகள் விளக்கப்பட்டுள்ளன. எனினும் முறைசார் கல்வியில் பழக்கப்பட்ட சமூகத்தினர் அந்த முறைகளையே கையாண்டு வருகின்றனர். இதனை மாற்றி நூலறிவிற்குப் பதிலாக செயல் அனுபவத்திற்கு இடம் அளிப்பது அவசியமானது. அப்பொழுதுதான் சிந்தித்துச் செயற்படும் முதிர்ச்சி நிலை ஏற்படும்.

## குடும்பத்தின் பங்கு

பிள்ளைகளைப் பெற்று வளர்த்து காத்து சமூகவியல்பினனாக்குவதற்கென உள்ள அமைப்பே குடும்பமாகும். இதுவே அன்பின் ஆய்வுகூடம்: அன்புப் பரிமாற்றம், நெருக்கமான பிணைப்பு, சுயநலமற்ற செயல்களின் இருப்பிடம் குடும்பமாகும். புரிந்துணர்வு, மதிப்பு, பொறுப்பு, தியாகம், கூடிவாழ்தல், என்ற பண்புகளின் பிறப்பிடமும் இதுவே. இதில் தாயின் பங்கு மிகவும் முக்கியமானது. இன்று ஆணும், பெண்ணும் தொழில் சார்ந்த வாழ்வில் ஈடுபடுவதனால் குழந்தைகள் வீட்டில் பெறவேண்டிய அனுபவங்களைப் பெறும் வாய்ப்பினை இழக்கின்றனர். இதனால் பூரண விருத்தி தடைப்படுகின்றது. அத்துடன் பழக்க வழக்கங்கள் சீராவது மில்லை. நாவு மணித்தியாலங்கள் இயங்கும் ஞாயிறு பாடசாலைகளில் அறநெறி வளர்ச்சியின் முழுப்பங்கினை எப்படிச் சுமத்தி விட முடியும்? குடும்பத்தோரின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் இப் பாடசாலையின் வளர்ச்சியில் மிகவும் முக்கியமானதாகும்.

## சூழற் காரணிகள்

ஒழுங்கும் அமைதியும் கூடிய வாழ்க்கை முறையினைத் தோற்றுவிப்பதில் சூழலின் பங்கு முக்கியமானது. மக்களிடையே விரக்தி, மன இறுக்கம், அதிருப்தி தோன்றுமாயின் அறம் வளர்க் முடியாது.

மந்தமான பொருளாதாரம், தொழிலின்மை என்பன வறுமைக்குக் காரணமாக அமையும். ஒரு நேர உணவு பெறமுடியாதவர் வாழ இல்லமற்று வசிப்போரிடம் நெறி முறையான வாழ்வைப் பற்றிப் பேச முடியுமா? சேவை மனப்பாங்கின் விருத்தி மூலமே பசி, பட்டினி, வறுமை ஆகியவற்றை நீக்க முடியும். எமது பாடத்திட்டத்தில் இத்தகைய செயற்பாட்டு அனுபவங்களுக்கு இடம் அளித்தல் பயனளிப்பதாகும்.

அறநெறிநிலையங்களின் தொழிற்பாட்டினை மேம்படுத்தும் வகையில் மேல்வரும் சிந்தனைகள் ஆக்கபூர்வமானவை. அறநெறி நிலையங்கள் முறையான பாடசாலைகள் அல்ல. ஆசிரியர்களும் ஊக்குவிப்பாளர்களே.

முறைமைப் பாடசாலைகளில் பாடநெறிகளைக் கற்பதைப் போன்று அறிவு பூர்வமாகப் போதிப்பதனால் எமது குறித்த இலக்கினை அடைய முடியாது. பங்கேற்றுக் கற்கும் முறைசாராக் கற்றல், கற்பித்தல் யுத்திகளைக் கையாள்வது அவசியம். அப்பொழுது அவதானம், பங்குபெறல், சிந்தித்தல், கூடிஇயங்குதல், பொறுப்பேற்றல் ஆகிய பண்புகள் தோன்றும்.

வாரம் ஒரு தினம் 4 மணி நேரம் நடைபெறும் அறநெறிப் பாடசாலைகளில் சிறுவர்களின் வயது, பிள்ளைகளின் வளர்ச்சிநிலை, புரிந்துணர்வு, நம்பிக்கை உருவாகும் வகையில் கற்பித்தல் முயற்சிகளில் ஈடுபடல் வேண்டும்.

கற்றல் சந்தர்ப்பங்களை (Learning Opportunities) உபயோகித்து, வாழ்க்கைக்குப் பயனுள்ள அனுபவங்களைப் பெறும் வகையில் செயற்படும் போது, சிறுவர் இவற்றை விரும்பி பயபக்தியுடன் தாமாகவே செயற்படுவர். இச்சிறுவர் செயல்கள் பெற்றோரையும் ஊக்குவிக்கக் கூடியது. பெற்றோர்: மூத்தோர் கூடிய நேரம் சிறுவர்களுடன் இடைத்தாக்கம் பெறுவதற்கு (Interaction) வாய்ப்பளிப்பது நெருங்கிய உறவினைத் தோற்றுவிக்க வல்லது.

சமய வழிபாடுகள், அனுட்டானங்கள், விழாக்கள், போன்றன வீடுகளிலும் இடம்பெறவேண்டும் பார்த்துப்பழகும் இயல்புடையோர் சிறுவர். எனவே இவற்றை அவர்களும் பின்பற்றக்கூடிய வாய்ப்புக்களைக் கொடுக்கும். சிறுவர்களைக் கோவில்கள்இ விழாக்கள்இ சுற்றத்தார், உறவினர் வீடுகளுக்கும், விவாகம், மரணச் சடங்குகள், புதுமனைபுகுதல், திவசங்கள் போன்ற கிரியைகளுக்கும் அழைத்துச் செல்ல வேண்டும்.

முத்தோர் ஃபெற்றோர் பேச்சு, சிந்தனை, நடத்தை, செயல் என்பவற்றில் சிறுவர்களுக்கு உதாரண புருக்ஷர் (Role Models) களாக விளங்க வேண்டும்.

வறுமை நிலையிலுள்ள குடும்பங்கள் அல்லது, அறநெறி நிலையங்களைச் சார்ந்துள்ள குடும்பங்களின் நலனைப் பேணும் முயற்சிகளை ஊக்குவிப்பாளர்கள் கரிசனை கொண்டு, சமூக சேவை முயற்சிகளில் ஈடுபடல் வேண்டும். சுயதொழில் பயிற்சிகள், சுற்றாடல் சுகாதாரம், முதியோர் கல்வி, சிறுவர் முன்பள்ளி முயற்சிகள், பெற்றோரை ஈடுபடுத்தல் என்பன பயன்தரதக்கன.

பேற்றோர்உடன் ஏற்படுத்தும் பிணைப்பும் சிறுவர்களிடம் பெறும் மதிப்பும், நம்பிக்கையுமே அறநெறி நிலையங்களின் வெற்றிக்குக் காரணமாக அமையும். சமய தத்துவங்களை கற்பிப்பதோடு நில்லாது, சமூகவியல் ரீதியான அனுபவம், பயிற்சிகளில் ஈடுபடும் போது இப்போதனை முறை புதியவளர்சிப் படிகளை அடையும்.

எனவே அறநெறிப் பாடசாலைகளின் போதனை முறையிலும், அவற்றின் சாதனைகளிலும் புதிய சிந்தனையும் வளர்க்க முயல்வோமாக.

நன்றி கோபுரம்.

2000ம் ஆண்டு சிறப்பு மலர்.



1999 ல் அறப்பள்ளி அங்குரார்ப்பண வைபவம்.தொண்டர் சபைத்தலைவர் செல்வன் இ.சிவகுமார் கிராம அலுவலரடகடகு மாலை சுட்டிவரவேற்கின்றார். ஆலய நிர்வாகசபைத்தலைவர்,செயலர் உறுப்பினர் ஆகியோர் காணப்படுகின்றனர்.



திரு.க.ஆனந்தகுமாரராஜா
ஆலய உரிமையாளர், பரிபாலனசபை போஷகர்.

# தலையாழி

தலையாழி வண்ணார்பண்ணைக்கும் கொக்குவிலுக்கும் இடையில் இருக்கும் ஒரு கிராமம்.

**பூர்வீகக் குடிகள்**

தலையாழியைச் சேர்ந்த சனத்தொகை அதிகமாக 3 பிரிவுகளைச் சேர்ந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஒரு பிரிவு இந்தியாவில் உள்ள திருநெல்வேலியிலிருந்து வந்த சிதம்பரப்பிள்ளையின் பிள்ளைகளும் அவர்கள் குடும்பங்களும் இவருக்கு 5ஆண்பிள்ளைகளும், 3பெண் பிள்ளைகளும், மூத்த மகன் சரவணமுத்து உடையார், சிதம்பரப்பிள்ளையின் முன்னோர் கட்டப்பொம்மன் காலத்தில் மந்திரியாகவிருந்து கிறிஸ்தவ துன்புறுத்தல்களால் இந்தியாவை விட்டு யாழ்ப்பாணம் வந்தவர்கள் இன்னுமொரு பிரிவு செட்டியர் இனத்தைச் சேர்ந்த வீரப்பன் செட்டியாரின் சந்ததியினர். இப்பிரிவிலிருந்து வந்தவர்கள் அதிகமாக சிதம்பரப்பிள்ளை குடும்பத்தினுள் மணம் புரிந்து அவர்களுடன் கலந்து விட்டார்கள். இப்பிரிவிலிருந்து வந்த அருணாசலம்சபாபதி தன்னுடைய மைத்துனியாகிய சரவணமுத்து உடையாரின் மகளைத் திருமணம் செய்தார்.

இன்னுமொரு பிரிவு இருமரபும் தூய தனிநாயகமுதலியின் வம்சாவளியினராகிய புங்குடுதீவைச் சேர்ந்தவரும் சரவணமுத்து உடையாரின் மனைவியும் ஆவார். அவர் புங்குடுதீவிலிருந்து மணப்பெண்ணாக வந்த போது பல்லக்கில் வந்ததாகக் கூறுவர்.

இந்தக் குடும்பத்தவர்கள் எல்லோரும் ஒருவருக்கு ஒருவர் நெருங்கிய உறவினர்கள். தலையாழியின் மற்றொரு முக்கிய அம்சம் அங்கு அருள் புரியும் ஞானவைரவசுவாமி கோவில் அது பல காலமாகச் சிறிய கோவிலாக இருந்து சரவணமுத்து உடையார் காலத்தில் அருணாசலம் செட்டியாரால் பெரிய கோயிலாகப் புனருத்தாரணம் செய்யப்பட்டது. அருணாசலம் செட்டியாரின் மனைவி சரவணமுத்து உடையாரின் சகோதரி என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அருணாசலம் செட்டியாரும் அவருடைய மனைவியும் எழுதிய உறுதிப்படி கோவில் உரிமையும் நிர்வாகமும் அவருடைய ஆண்வாரிசுக்களுக்கே சேர்ந்தது. தலையாழியின் மேற்கூறிய குடும்பத்தை தவிர வேறு சில பெரிய குடும்பங்களும் பல காலமாக இருந்து வருகின்றார்கள்.

ஒரு குடும்பம் இலங்கைநாயகம் தம்பியப்பா முதலியாரின் குடும்பம் ஆகும். இக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் தலையாழிக் கிராமத்தைச் சொந்தமாகக் கொண்டவர்கள். மேற்கூறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கல்வியால், சிறந்து

பலதுறைகளில் பணிபுரிபவர்களாக வாழ்ந்தார்கள். இவர்களில் ஒருவர்தான் மதிப்புக்குரிய பெரியார் சபாபதிப்பிள்ளை அவர்கள். இவர் பணி பற்றி இங்கு சுருக்கமாகத் தருவோம்.

# தலையாழி தந்த தலைமகன் சபாபதிப்பிள்ளை



⇨சைவ பரிபாலன சபை ஸ்தாபகர்களில் ஒருவர்

⇨30 வருடங்களாக இந்து சாதனப் பத்திரிகையின் ஆங்கில ஏடான Hindu Organ ஆசிரியராகக் கடமையாற்றியவர். இக்காலப் பகுதி இப்பத்திரிகையின் பொற்காலமாகும். இப்பத்திரிகை அன்று தேசியசெய்திப் பத்திரிகையாகவும் தமிழ் மக்களின் பிரதான குரலாகவும் விளங்கியது.

⇨யாழ்.இந்துக்கல்லூரியின் ஸ்தாபகரும் அதன் கிளைக் கல்லூரிகளின் ஸ்தாபகருமாக விளங்கினார். (1914 ~ 1924)

⇨யாழ்ப்பாணச் சங்கத்தின் (Jaffna Association) தலைவராக விளங்கினார்.

⇨இலங்கைச் சட்டநிரூபண சபையின் உறுப்பினராக 1917ல் இருந்து 1921ம் ஆண்டுவரை இருந்தார்.

⇨இலங்கை அரசியல் யாப்புத் திருத்தம் தொடர்பாக அன்று தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்தவர்களில் முக்கியமான ஒருவர்.

⇨யாழ்ப்பாணத்தின் சமூக பொருளாதார அபிவிருத்திக்காக சுமார் முப்பது வருடங்களாக உழைத்தார்.

⇨இலங்கையில் வரட்சியும் அதனால் பஞ்சமும் ஏற்பட்ட காலப்பகுதியில் இந்தியாவிற்கு உதவி நாடிச் சென்ற தூதுக்குழுவுக்குத் தலைமைதாங்கினார்.

⇨கிளிநொச்சிப் பிரதேசத்தை விவசாய மையமாக்க உழைத்தவர்களில் முக்கியமானவர்.

⇨இவர்காலத்தில் இலங்கையின் நிலச்சுவாந்தர்கள், வர்த்தகச் செல்வந்தர்களில் இவரும் ஒருவர்.

⇨யாழ்-மலையாள புகையிலை வர்த்தகத்தின் ஏகபோக உரிமையுடையவராகவும் இந்தியா, பர்மா, மலேசியா ஆகிய நாடுகளோடு வர்த்தகத் தொடர்புடையவராகவும் விளங்கியவர்.

## மருத்துவத்தில்

பெரியார் சபாபதிப்பிள்ளையவர்கள் பல்வேறுபட்டதுறைப்பணிக்குத் தன்னை அர்ப்பணித்தவராக இருந்து புகழ் பெற்றார். தலையாழியில் அன்று இலங்கையில் மருத்துவத்தில் புகழ் பெற்றவர்களும் இருந்தார்கள். அவர்களில் ஒருவர் டாக்டர் கொவிங்ரன் (Dr.M.Covington) இவர் பிரித்தானியாவில் சத்திரசிகிச்சை நிபுணராகக் கற்றுத் தேறிய முதல் இலங்கையர் என்ற பெருமைக்குரியவர். இவர் கிழக்கு மாகாண (மட்டக்களப்பு) சத்திரசிகிச்சை நிபுணராகவும், மாகாண வைத்திய அதிகாரியாகவும் கடமையாற்றினார். இவரையடுத்துக் குறிப்பிடத்தக்கவர் டாக்டர் து.சின்னையா அவர்.கள். இவர் செல்லையா உடையாரின் சகோதரர். இவரது புதல்வர் டாக்டர் சின்னையா தெல்லிப்பழை வைத்தியசாலையில் நீண்டகாலமாகப் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

## பத்திரிகைத்துறை

பத்திரிகைத் துறையில் தலையாழிக் கிராமத்துக்கு ஒரு பாரம்பரியம் உண்டு. பெரியார் சபாபதிப்பிள்ளையைத் தொடர்ந்து அவரின் உறவினர்கள் ஆங்கிலப்புலமையும் பத்திரிகாதர்மமும் உடையவர்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது, திரு.ஷேக்ஸ்பியர் நாகலிங்கம் பெரியாரின் நெருங்கிய உறவினரில் ஒருவர். இவர் இந்து சாதன ஆங்கில இதழின் ஆசிரியராகக் கடமையாற்றியவர். இவரோடு உதவி ஆசிரியராகப் பெரியாரின் மற்றுமொரு உறவினரான திரு.மு.கதிரவேலுவும் கடமைபுரிந்தார். இவர் பின்னர் ஏரிக்கரைப்பத்திரிகைகளின் (Lake House) மாவட்ட நிருபராகவும் யாழ் மண்ணில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட தேசிய தினசரியான "ஈழநாடு" உருவாவதற்கு உந்துகோலாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்துப் பத்திரிகைத்துறைக்குத் தன்னை அர்ப்பணித்த முக்கியமான ஒருவர் பெரியாரின் மற்றுமொரு நெருங்கிய உறவினர் திரு.செ.சிதம்பரநாதர் ஆவார். ஆங்கிலப்புலமை மிக்க இவர் "ரைம்ஸ்" (Times) பத்திரிகையின் ஆசிரிய பகுதியை அலங்கரித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களோடு பத்திரிகைப் பணி எழுத்துத்துறை நின்றுவிடவில்லை. பிற்காலத்தில் "ஈழநாடு" பத்திரிகையின் வாரமலர் ஆசிரியராக திருமதி.குணமணி.ஷண்முகடகதாஸ் (திரு.மு.கதிரவேலுவின்புதல்வி)கடமையாற்றியுள்ளார். அவரது சகோதரர் பரமசாமியும் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது,

## ஆங்கிலப்புலமை

அன்று ஆங்கிலக் கல்வியின் ஆதிக்கம் ஆட்சி பெற்ற காலம் யாழ் குடாநாட்டில் தலையாழிக் கிராமம் அன்று ஆங்கிலப்புலமைக்குத் தனித்துவம் வாய்ந்ததாக விளங்கியது. பல்வேறு துறைகளில் பலாஆங்கிலக்கல்வி மூலம் இங்கு பிரசித்தி பெற்றிருந்தாலும் ஷேக்ஸ்பியர் நாகலிங்கம் குறிப்பிடத்தக்க பெரியார் ஆவார். இவர் கல்கத்தா பல்கலைக் கழகப்பட்டதாரி, பத்திரிகைத் துறையை விட்ட பின் யாழ் இந்துக் கல்லூரியில் ஆங்கில ஆசானாக இருந்த போது இவரின் ஆங்கிலக் கற்பித்தல் சிறப்பால் "ஷேக்ஸ்பியர்" நாகலிங்கம் எனப் பெயர் பெற்றவர் பின்னர் சிவபதம் அடையும்வரை கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபராக விருந்தார். இவரை அடுத்து இக்கிராமத்தில் சிறந்த ஆங்கில ஆசானாக விளங்கியவர் திரு.செ.தில்லைநாதர் முன்னவரின் நெருங்கிய உறவினரான இவர் கொக்குவில் இந்துக்கல்லூரியின் ஆங்கில ஆசான்.

இவ்வாறு இத்தகைய இன்னும் இங்கு வாழ்ந்த பிரபலமான வேறு குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் அன்று கல்வியால் சிறந்து விளங்கினார்கள் என்பது தெரியவருகின்றது.

❋ ❋ ❋

இக்கட்டுரையாளர் தலையாழிக் கிராமத்தின் பூர்வீகக் குடிகளையும் அன்றைய செழிப்பையும், இச்சந்தர்ப்பத்தில் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்.

இங்கு வாழ்ந்த பூர்வீகக் குடிகளில் இன்னுமொரு குடும்பத்தினரை நான் அறிந்த வகையில் குறிப்பிடுகின்றேன். அது செம்போர முதலியார் குடும்பம். இக்குடும்பத்துக்கும் பொன்னாவளி உடையார் குடும்பத்துக்கும் திருமண உறவு ஏற்பட்டது. இக்குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் சைவாசார சிலர்களாகவும் ஞானவைரவப் பெருமானை ஆராதிப்பவர்களாகவும் வாழ்ந்தார்கள். இவர்களில் ஒருவரான தனங்களப்புச் சட்டம்பியார் என அழைக்கப்படும் இராமநாதர் சம்புநாதர் வைரவர் ஆலய விசேட தினங்களில் புராண படனம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது,

ஞானவைரவர் ஆலயத்தின் முன்னாள் தலைவர் திரு.அ.இராமநாதன் இச்செம்போர முதலியார் குடும்பத்தவரே இவரது சகோதரர் திரு.அ.ஸ்ரீக்குமரன் பெரியார் சபாபதிப்பிள்ளையை ஒரு ஸ்தாபகராகக் கொண்ட யாழ் இந்துக்கல்லூரியின் இன்றைய அதிபராக விளங்குகின்றார்.

பெரியார் சபாபதிப்பிள்ளையின் பேரனான மேற்படி கட்டுரையாளர் நீண்ட காலமாக லண்டனில் வசித்து வருவதால் தலையாழியின் சமீபத்திய இன்றைய நிலைப்பாட்டை நேரில் காணாததால் இன்றைய நிலையை எழுத முடியவில்லை.

## இன்று

இடைக்காலத்தில் அரசியல் சூழ்நிலையால், இடம் பெயர்வால் ஏற்பட்ட அனர்த்தங்களால் யாழ் குடாநாட்டின் கிராமங்கள் பல தத்தம் தனித்துவத்தை இழந்தமையையும் தத்தம் கிராமங்களைவிட்டு மக்கள் இடம் பெயர்ந்து வேறு இடங்களில் குடியேறியுள்ளமையையும் யாம் அறிவோம். இதற்குத் தலையாழிக் கிராமமும் விதிவிலக்கல்ல பூர்வீகக் குடிகளின் வம்சாவழிகளான பலர் வெளியேறியுள்ளனர். புதியவர்கள் பலர் வந்து குடியேறியுள்ளனர். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்றதற்கு இணங்க வந்தவர்கள் தம்மண்ணாகவே நினைத்துத் தலையாழிக்கிராமத்தைப் பல வழிகளாலும் சிறப்புறச் செய்துள்ளனர். ஆசிரியர்கள், அதிபர்கள், டாக்டர்கள், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், வர்த்தகர்கள், தனியார் கல்வி நிறுவனத்தினர் எனத் தலையாழிக் கிராமங்களை பொருந்தியதாக உள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக இங்கு இன்று வாழும் மக்கள் எம்பெருமான் வைரவரின் வழிபடுநர்களாகவும் ஆலயத்திருவிழாக்களைப் பொறுப்பேற்றுச் செய்பவர்களாகவும், ஆலயத்திருப்பணிகளுக்கு உதவுபவர்களாகவும் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. எம்பெருமான் அருளால் அவர் அருளாட்சியில் உள்ள தலையாழிப்பதி என்றென்றும் செழித்தோங்கும்.

~மலராசிரியர்~

**கல்வியின் சாரம்**

கல்வியின்சாரம் மன ஒருமைப்பாட்டிலேயே உள்ளதுவெறுமனே பல விஷயங்களைப் படிப்பதில் அல்ல.

~சுவாமி விவேகானந்தர்~

# ஞானவைரவர் ஆலய வரலாறும் வளர்ச்சியும்

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம். கோயில் விளங்க குடி விளங்கும் என்பன நம் ஆன்றோரின் அமுதமொழி. இவற்றை மனங்கொண்ட தலையாழிப் பதியின் நான்கு தலைமுறைக்கு முந்திய மூத்த குடிமக்கள் தங்கள் வழிபாட்டிற்காக ஞான வைரவப் பெருமான் ஆலயத்தை அமைத்தனர்.

தலையாழிக் கிராமம் வண்ணையம்பதியில் கோயில் கொண்டிருக்கும் அன்னை காமாட்சி ஆலயத்திற்கும் கொக்குவிலுக்கும் இடைப்பட்ட ஒரு கிராமமாகும். வடக்கே ஒரு ஆழமான குளம் இருந்து இக் கிராமத்தின் பெரும் பகுதி மக்களை வெள்ள அபாயத்தில் நின்றும் காப்பாற்றியது. கிராமத்தின் வடக்கே தலைப் பகுதியில் இந் நீர்ப்பரப்பு இருந்ததனால் தலையாழி என பெயர் பெற்றிருக்கலாம் என கருத இடமுண்டு.முக்கனிச் சோலைகளாலும் கல்வி மான்களாலும் செழிப்புற்றிருந்த தலையாழிக் கிராமத்தில் அமைக்கப்பட்டிருந்த இந்த ஞானவைரவர் ஆலயம் ஈழத்திலேயே வைரவப் பெருமானுக்கு அன்று எடுக்கப்பட்ட ஆலயங்களில் மிகப் பெரியது. ஆலயம் நிறுவப்பட்ட வருடம் சரியாகக் குறிப்பிட முடியாதெனினும் 150 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழம் பெருமை வாய்ந்த ஆலயமென திட்டவட்டமாகக் கூறலாம்.

### நாவலரும் யோகர்சுவாமிகளும்

ஈழத் திருநாட்டில் சைவத்தையும், தமிழையும்காக்கவென 1822 ஆம் ஆண்டு நல்லை நகரில் அவதரித்த நாவலர் பெருமான் இவ்வாலயத்திற்கு பல்லக்கில் வருகை தந்து சமயப் பிரசங்கங்களை ஆற்றியுள்ளார். அவரது பிரசங்கங்களை அன்று கிராமத்துப் பெரும் பகுதி மக்களை புலால்புசியாப் புண்ணியர்களாக்கியது நாவலர் பெருமானின். சமயாசாரக் கருத்துக்களை ஏற்ற கிராமத்துப் பெரியோர்கள் ஆசாரசீலர்களாக ஆகமவிதிபிசகாது ஆலய நித்திய, நைமித்திய கருமங்களை நடாத்தி வந்தனர். பிற்காலத்தில் கொழும்புத்துறை முனிவர் சிவயோகசுவாமிகளும் அவரது அடியார்கள் இருந்த இக் கிராமத்து ஆலயமான ஞானவைரவப் பெருமானை வந்து தரிசித்துள்ளார்.

### ஆலய நிறுவுனர்.

இவ்வாறு நாவலர்பெருமான் சிவயோகசுவாமிகள் ஆகிய புனிதர்களின் பாதம் பதித்த புகழ்பூத்த ஆலயத்தை நிறுவியவர்கள் தலையாழிக் கிராமத்தில் தனிச்சிறப்போடு வாழ்ந்து கிராமத்தின் நன்மதிப்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமான ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பெருமகனாவார். இக் கிராமத்தில் அந்நாளில் யாழ்.குடாவில் மிகப் பிரபலமடைந்து விளங்கிய சரவணமுத்து உடையார் என்னும் பெருமகனாரும் அவரது நான்கு சகோதரர்களும், அவரின் சகோதரிகளின் கணவன்மாருமே இக்குடும்பத்தவர் ஆவர். யாழ்ப்பாணத்தின் பிரபல சோதிடர் இரகுநாதையாவும் ஞானவைரவர் ஆலயம் நிறுவுவதில் இவர்களுக்கு உதவியாகவிருந்தார். கிராமத்தில் உள்ள ஏனைய பெரியோர்களும் இவர்களுக்கு உதவி எம்பெருமானுக்கு இப் பெரிய ஆலயம் எடுக்க காரணமாயினர் எனக்கூறப்படுகிறது. நாவலர்பெருமான் போதித்த ஆலய ஆசாரவிதிகள்,ஆகம விதிகள் ஆகியன கிராம மக்களாலும் பூசகர்களாலும், நன்கு கடைப் பிடிக்கப்பட்டு நித்திய நைமித்திய பூசைகள் சிறப்பாக நடைபெற்றன. விசேட வேளைகளில் தனங்களப்பைச் சேர்ந்த இராமநாதர் சம்புநாதர் அவர்களாலும் புராணபடனம் மேற்கொள்ளப்பட்டது.

## நிர்வாகம்

தமிழ்,சமூக,சமயப்பற்றுகளில் மேலோங்கியவர்களாக விளங்கிய சரவணமுத்து உடையார் குடும்பத்தினர் சரவணமுத்து உடையாரிடமே ஆலய நிர்வாக பொறுப்பை ஒப்படைத்தனர்.சில ஆண்டுகளுக்குப் பின் உடையாரின்மைத்துனர் திரு.மு.அருணாசலம்பிள்ளை ஆலய நிர்வாக பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.இவரும் மைத்துனர் உடையாரை அடியொற்றி பத்து நாட்கள் அலங்கார உற்சவம் புராணபடனம் ஆகியவற்றைச் சிறப்பாக நடாத்தி வந்தார். இப்பெரியார் ஆலயத்தின் பணிகள் தடையின்றிச் செவ்வனே நடைபெறும் பொருட்டு தோட்டக்காணிகள், விளைநிலங்கள் ஆகியவற்றை ஆலயத்திற்கு எழுதி வைத்ததோடு ஆலய வடக்கு வீதியில் தங்கள் வளவில் ஒரு வீட்டையும் கட்டி ஆலயக்கிரியைகள் செய்யவருவோர் வசதிக்காகவும், அன்னதானம் ஆகியன நடைபெறவும் உதவினார்.

## பஞ்சாங்க உதயம்

ஆலயம் அமைப்பதற்கு ஒத்தாசையாக இருந்தவரும் அர்ச்சகரும், பிரபல சோதிடராகவும் விளங்கிய இரகுநாதையா அவர்கள் வாக்கிய பஞ்சாங்கம் ஒன்றை வெளியிட விருப்பம் தெரிவித்தார்.இப்பணிக்கு திரு.மு.அருணாசலம்பிள்ளை அவர்கள் உதவிபுரிந்தார். இதன் மூலம் சோதிட பரிபாலன மடத்திற்கும் ஆலயத்துக்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தி மடத்தின் தொடர்புள்ளவர்களே தொடர்ந்து ஆலய பூசகர்களாக இருக்க வேண்டும் எனக் கூறப்பட்டது.

## சபாபதிப்பிள்ளையின் காலம்

திரு.மு.அருணாசலம்பிள்ளைக்குப் பின்னர் அவரது புதல்வர் திரு. சபாபதிப்பிள்ளை தந்தையின் திருத்தொண்டைத் தொடர்ந்தார். திரு. சபாபதிப்பிள்ளை சைவ பரிபாலனசபைத் தலைவராக இருந்து சபை வெளியிட்ட Hindu Organ ஆங்கில ஏட்டின் பிரதம ஆசிரியராக விளங்கினார். இத்துடன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியினதும் அதன் கிளைக் கல்லூரிகளினதும் முகாமையாளராகவும் கடமை புரிந்தார். பல்வேறு சமய, சமூக, அரசியல் சங்கங்களின் தலைமைத்துவமும் இவருக்கு கிடைத்தது. சபாபதிப்பிள்ளை அவர்களின் அறிவாற்றலும், ஆளுமைத் திறனும் அன்று இலங்கைச் சட்டசபையின் ஓர் அங்கத்தவராக நியமனம் பெற அவருக்கு வாய்ப்பளித்தது. அரசியல் செல்வாக்கும் தான் வாழந்த கிராமத்தில் கிடைத்த மதிப்பும் வைரவப் பெருமான் ஆலயத்தைப் புத்தொளி பெறச் செய்ய உதவின. மலையாளப் புகையிலை வர்த்தகர் பலரது உதவி இவருக்குக் கிடைத்தது. ஆலயத்திருப்பணி வேலைகள் துரிதமாக நடைபெற்றன. ஆதி வைரவரை (சூலம்) மூலவராகக் கொண்டிருந்த இவ்வாலயத்தில் காசியில் இருந்து கொண்டு வந்த வைரவ மூர்த்தியை மூலவராக இவர் பிரதிஸ்டை செய்தார் எனக் கூறப்படுகிறது. ஆலயம் முன்னிலும் பார்க்க புதுப்பொலிவு பெற்றது. இந்தியாவிலிருந்து கோவிலுக்கு தேவையான பொருட்களையெல்லாம் தருவித்து வெகு சிறப்பாக வேதாகம வித்தகர்களான குருமார்களைக் கொண்டு கும்பாபிஷேகம் செய்வித்தார். வைரவப்பெருமான் ஆலய வரலாற்றில் சபாபதிப்பிள்ளை அவர்களின் நிர்வாககாலம் ஒரு பொற்காலம் எனில் மிகையாகாது. இப் பெரியார் மறைவுக்குப் பின்னர் ஆலய நிர்வாகத்தை அவரின் மகன் திரு.கனகரத்தினம் ஏற்றுக் கொண்டார். இவர் கோவிலை பரிபாலிக்கும் காலத்தில் சுகவீனமுறவே கோவில் அலுவல்களைச் செவ்வனே கவனிக்க இயலாதவரானார். திரு.கனகரத்தினமும் இறைபதம் அடையவே நீண்டதொரு காலப்பகுதி வரை தலையாளி வைரவப்பெருமான் ஆலயப் பல பகுதிகள் சிதைந்த கோலமாக காணப்பட்டன.


(இப் பகுதி பத்திராதிபர் அமரர் முத்தையாபிள்ளை கதிரவேலு (சரவணமுத்து உடையாரின் நெருங்கிய உறவினர்)வர்கள் எழுதிவைத்த ஆலய வரலாற்றுக் குறிப்பில் இருந்து தரப்படுகிறது).

**மீண்டும் புதுப்பொலிவு**

1988 ஆம் ஆண்டு இந்திய அமைதிப்படை இங்கு நிலைகொண்ட வேளை தமிழ் உள்ளங்கள் தட்டுத்தடுமாறி தவித்தகாலம்! படையினர் திடீரென ஆலயங்களுக்குள் மக்களைச் சென்று தங்குங்கள் என உத்தரவிட்ட நேரம் தலையாழி வாழ் அன்னையர் பலர் தங்கள் அன்புச் செல்வங்களோடு பாதுகாப்புத்தேடி அன்னை காமாட்சி ஆலயத்துள் இரவெல்லாம் தஞ்சம் புகுந்து காலை வீடு திரும்பும் பரிதாபம்! இந்த அல்லோலகல்லோல அவலவேளையில் புதர்களால் மூடி இடிபாடுகள் பலவோடு இருந்த எம்பெருமானின் ஆலயத்தைப் புனரமைக்கும் எண்ணம் உதயமானது. அன்றைய ஆலயகுரு கோபாலையா அவர்கள் ஒருசில பெரியாரின் சிறு உதவிபெற்று சிறு திருத்த வேலைகள் செய்ய முன்வந்தார். அதற்கு அமரர் பரமசாமியும், (பத்திராபதிர் கதிரவேலுவின் புதல்வர்) முன்னின்று உழைத்தார். கும்பாபிஷேக தின சங்காபிஷேகத்தை (1008) செய்யும் கொக்குவில் M.S.துரையின் மகனார் திரு.பாலசுப்பிரமணியமும் இவர்களை ஊக்குவித்தார். ஆனால் சிறுதொகைப் பொருளோடு ஓரிருவர் செய்து முடிக்கத்தக்க திருப்பணியாக இல்லாது பாரிய திருப்பணியாக இருப்பதை மூவரும் உணர்ந்தனர். திரு.பாலசுப்பிரமணியம் வைரவப் பெருமானின் அருள் பெற்று உயர்ந்த பெரியார் அவர் ஆலயத்தை முழுவதும் பனரமைக்க வேண்டுமென பரமசாமியிடமும், கோபாலையாவிடமும் கூறிக்கொண்டார். இக் கூற்று தொண்டுள்ளம் கொண்ட பரமசாமியின் உள்ளத்தைத் தொட இப் பாரிய முயற்சிக்குப் பெரும் பங்களிப்புத் தேவையென மனங்கொண்டார். ஊர்கூடித்தான் தேர் இழுக்க வேண்டும் அல்லவா? இப்பணியை ஆரம்பிக்க தகுந்தவர் ஒருவரைத் தேடினார்.

அகப்பட்டார் ஒருவர் அஞ்சாநெஞ்சர் எண்ணிய எண்ணியாங்கு முடிக்கும் திண்ணியர்! அவர் தான் ஆசிரியப் பெருந்தகை நாகலிங்கம். நாகலிங்கம் மாஸ்ரர் என்றபல் அறியாதவர் இருக்க முடியாது. பரமசாமியும் அவரும் இணைந்து ஊர்ப் பெரியவர்களையும் வழிபடுநர்களையும் சந்தித்தனர். காலத்தின் கோலம் இறைவனை இடையறாது நினைக்கவேண்டிய நேரம் ஊர் மக்கள் ஒன்று திரண்டு வைரவப் பெருமானின் ஆலயத்தைப் புனரமைக்க முன் வந்தனர். வழிபடுநர் சபை, பரிபாலனசபை உதயம் பெற்றன. இச் சபையூடாக இருவரது அயரா உழைப்பினால் புதுமெருகும், புதுப்பொலிவும் பெற்றது. புதிதாக நந்தகோபாலரும், முருகனும் பரிவார மூர்த்திகளாக அமைக்கப்பட்டன. புதிய மணிக்கூட்டுக் கோபுரமும் அமைக்கப்பட்டது. பழுதடைந்திருந்த ஏனைய பகுதிகள் யாவும் திருத்தியமைக்கப்பட்டன. 1990 ஆம் ஆண்டு ஆனி மாதம் 4ம் திகதி மகா கும்பாபிஷேகம் நடைபெற்றுத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெற்றது. வருடாந்த உற்சவத்தோடு 91 திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

**ஆலய வளர்ச்சியின் இரு தூண்கள்**




நாகலிங்க மாஸ்ரரும், பரமசாமியும் தலையாழி ஞானவைரவர் ஆலய வளர்ச்சியின் இரு தூண்கள் எனில் மிகையாகாது.

எதையும் தாங்கும் இதயங் கொண்ட இவர்கள் இருவரும் ஆலயப் பணியில் மட்டுமல்ல கிராமத்தின் அபிவிருத்திக்கே தங்களை அர்ப்பணித்த பெருந்தகைகள் கூட்டுறவு, அரசியல், சமூக அபிவிருத்தி ஆகிய சமூகப்பணிகள் பலவற்றில் தங்களை ஈடுபடுத்தி தம் செயற்கரிய செயல்களால் தம் சமூக மக்கள் உள்ளத்திலும், உதட்டிலும் உயிரோடு உலாவிவரும் போதும் இறையடி சேர்ந்த பின்னர் இன்றும் இடம்பிடித்துள்ள தன்னலமற்ற தொண்டர்கள்.

ஞானவைரவர் ஆலய வளர்ச்சியை பொறுத்தளவில் நாகலிங்கம் மாஸ்டரின் பணி மகத்தாது 1988இல் வழிபடுநர்சபை அமைப்பதில் முன்னின்று உழைத்தவர். அன்று தொட்டு 1993 இல் இறக்கும்வரை நிர்வாகச்செயலாளராகவும் பொருளாளராகவும் இருந்து அரும்பணிபுரிந்தவர். அலங்காரத்திருவிழா பத்து உட்பட எம்பெருமானுக்கு சகலவிரத தினங்களையும் உள்ளடக்கி 91 திருவிழாக்களை ஏற்படுத்திய பெருமைக்குரியவர்.

தொண்டுகளில் ஈடுபட்டால் தான் பக்தி அவர்களைப் பற்றிக் கொள்ளும் என்பது அவரது அசையா எண்ணம். இதனால் மாஸ்ரரும், பரமசாமியும் சேர்ந்து கிராமதிதில் உள்ள துடிதுடிப்பும் செயற்திறனும் பெற்ற இளைஞர்களை ஊக்குவித்து இந்து இளைஞர் மன்றம் ஒன்றை உருவாக்கினர். ஆலய தோட்டம் அமைத்தல், சிரமதானம் செய்தல், தினசரி கருமங்களில் உதவுதல், சமயப் பரீட்சைகள் நடாத்துதல், யாத்திரைகள் மேற்கொள்ளல் போன்றவைகளை அன்று இவர்கள் நிர்வாகிகளோடு இணைந்து அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் உட்பட்டுச் செயற்பட்டனர். அஞ்சா நெஞ்சினரும் திண்ணிய மனத்தினரும் ஆகிய நாகலிங்கம் மாஸ்ரரின் இழப்பு எம்பெருமான் ஆலயத்துக்கு மட்டுமல்ல கிராமத்துக்கு மட்டுமல்ல தமிழ் சமூகத்துக்கே பேரிழப்பெனலாம்.

கதிரவேலு பரமசாமி தன்குல தெய்வமான தலையாழி ஞானவைரவப் பெருமானின் ஆலயப் பணிக்கு தன்னை 1988ஆம் ஆண்டு அர்ப்பணித்துக் கொண்டவர். நாகலிங்கம் மாஸ்ரரின் மறைவுக்குப் பின்னர் ஆலயப் பணியில் பெரும் பகுதியை ஏற்றுக்கொண்டு செயற்பட்டார். 22.12.1991இல் இருந்து 20.12.2000ஆம் திகதிவரை அதாவது தான் சிவபதம் அடையும் வரை ஆலய பரிபாலனசபை உறுப்பினராக செயற்பட்டார். தன் காலப்பகுதியில் எத்தனை இக்கட்டான அரசியல் சூழ்நிலையிலும் ஆலய அலுவல்களை திறம்பட நடத்திய பெருமைக்குரியவர். 02.05.1993 இல் இருந்து நிர்வாக செயலாளர் பொறுப்பை ஏற்று அலங்காரத் திருவிழாக்கள் உட்பட 91 திருவிழாக்களையும் ஆகமவிதி பிசக விடாது ஆசார சீலராக நின்று செய்து முடித்தவர்.அரசியற்சூள்நிலை இடம்பெயர்வு காரனமாக உபயகாரர்கள் இல்லாத கஸ்டமான சூழ்நிலையிலும் பூசைகளில் தடங்கல் ஏற்படுவது கூடாது எனக் கொண்டு கிராமத்தில் உள்ள மக்களின் உதவியோடு ஒன்று விடாது சகல பூசைகளையும் செய்து நித்திய நைமித்திய பூசைகளில் குறைபாடு இல்லாது பார்த்துக் கொண்டார்.

விவேகமும், தொண்டுள்ளமும் கொண்ட இந்து இளைஞர் மன்ற இளைஞர் சிலர் கோவில் சூழலில் அமைத்த வாழைத்தோட்டத்தை தான் இருக்கும் வரை பாதுகாத்து மேலும் மடவளவுக்குள்ளும் விஸ்தரித்து ஆலயத்தின் அன்றாட தேவைகளுக்கு வேண்டிய வாழைப்பழத்தை இதில் இருந்து பெற்றதோடு அதன் மூலம் ஆலயத்துக்கு சிறு வருமானத்தையும் கிடைக்கச் செய்தவர். இவர் இருக்கும் வரை இரு தோட்டங்களும் செழிப்புக் குன்றாது காணப்பட்டன. இவர் பராமரித்து வளர்த்த தென்னங்கன்றுகள் இன்று எப்பெருமானின் பூசைத் தேவையின் ஒரு பகுதியை பூர்த்தி செய்யத்தக்க வகையில் காய்த்துக் குலுங்குகின்றன.


இவரது தொண்டின் துலக்கமாக அமைந்தது ஆலயத்தைச் சுற்றியுள்ள திருவீதியாகும். அனுபவமும், ஆற்றலும் செயற்திறனும்

உள்ளவர்களை கொண்டு அவர்களின் ஆலோசனையையும், உதவியையும் பெற்று திருவீதியை அமைத்தார். ஆலயத்தின் உள்ளே பூச்செடிகளை நடுவித்து நந்தவனம் நடுவே எம்பெருமான் கோவில் கொண்டது போன்றதொரு காட்சி காணப்பட்டது.

1995ல் இடம் பெயர்வு ஏற்பட்ட வேளை ஆலய அலுவல்கள் பலவற்றை சிறப்புறக் கவனித்துக் கொண்டிருந்த ஆலய பரிபாலனசபை உறுப்பினரும்,ஆலயஉரிமையாளருள் ஒருவரும் களஞ்சியப் பொறுப்பாளருமான நமசிவாயம் மகேந்திரன் தன்வசம் இருந்த ஆலய சாவிக் கொத்தையும், பொறுப்புக்களையும், நிர்வாகச் செயலர் பரமசாமியிடம் ஒப்படைத்துச் சென்றார். ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருந்து செய்த வேலைகள் எல்லாவற்றையும், மேற்பார்வை செய்து கவனிக்க வேண்டிய கட்டாயம் இவருக்கு ஏற்பட்டது.

ஆலயத்துள் அடைக்கலம் புகுந்தவர்களை ஆதரித்ததோடு அவர்களின் உதவியோடு ஆலயத்தையும், சூழலையும், தூய்மைப்படுத்திப் பாதுகாத்த கைங்கரியமும் இவரைச் சாரும். இறுதிவரை சமயப்பணியைத் தன்மூச்சாகக் கொண்ட இவரின் திடீர் இழப்பு ஈடுசெய்ய முடியாத தொன்றாகும்.

நிர்வாகச் செயலரான இவரின் மறைவுக்குப் பின்னர் 2001ம் ஆண்டு அமைக்கப்பட்ட திருப்பணிச்சபை குண்டுவீச்சால் சேதமுற்ற பகுதிகளைப் புனரமைத்து கருவறையை அடுத்துள்ள இரு மண்டபங்களையும் புதிதாக அழகுற அமைத்து 12 வருடங்களுக்குப் பின்னர் 08.12.2002ல் கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. தொடர்ந்தும் எம்பெருமான் அருளால் அவரது நித்திய நைமித்திய பூஜைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.



*வைரவர் ஆலயத்தின் ஒரு பகுதி*

# எங்கள் பாடசாலையின் தோற்றமும் வளர்ச்சியும்

தலையாழி ஞானவைரவர் ஆலய அறநெறிப் பாடசாலை 1999 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இதைத் ஸ்தாபித்த பெருமை அன்றைய காலப்பகுதியில் நிர்வாகச் செயலாளராகவும் பரிபாலனசபை உறுப்பினராகவும் பணியாற்றிய அமரர் கதிரவேலு பரமசாமியையே சாரும். இடம்பெயர்வு காரணமாக ஆலயத்தொண்டர்கள் பலர் உத்தியோகம், படிப்பு, வெளிநாட்டுப்பயணம் போன்ற இன்னோரன்ன காரணங்களுக்காகக் கிராமத்தை விட்டு வெளியேறியதால் பாரிய ஆலயப்பணிகளை செவ்வனே செய்ய ஆண், பெண், சிறுவர்கள் உட்பட்ட பரிபாலனசபை அனுசரணையோடு ஒரு தொண்டர்சபை அமைக்கப்பட்டது. இத்தொண்டர் சபை கிராமத்துப் பிள்ளைகளுக்கு ஆலய உற்சவத்தின் போது சமய அறிவுப்பரீட்சை நடாத்தியது. இச் சபையின் முதலாவது பரிசளிப்பு விழாவுக்கு (1999) அன்று உதவி அரசாங்க அதிபராக இருந்த திரு.து.வைத்திலிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராக வந்திருந்தார். இவ் விழாவில் உதவி அரச அதிபரிடம் அறநெறிப் பாடசாலை அமைப்பது பற்றிய எண்ணத்தைச் செயலர் வெளியிட்டார். அதற்கான உதவிகளைச் செய்வதாக உதவி அரச அதிபர் உறுதியளித்தார்.


ஆலயத்தின் வடக்கு வீதியில் ஆலய உரிமையாளருக்கு சொந்தமான இல்லம் நீண்டகாலமாக உரியவர்கள் வெளிநாட்டில் இருந்ததால் திருத்தப்படாத மிகப் பாழடைந்து இருந்தது. பலர் அதைத் திருத்தமுடியாது இடித்துத் தள்ளி விடலாம் எனக் கூறினர். ஆனால் செயலர் பரமசாமி பரிபாலன சபையின் ஒப்புதலோடு அதை அரும்பாடுபட்டு முழுமையாகப் புனரமைத்து எளிமையான விழாவெடுத்து ஆலய பரிபாலனசபைத் தலைவர் திரு. அ. இராமநாதன் கிராம அலுவலர் திரு.வி.சுந்தரலிங்கம் ஆகியோரைக் கொண்டு சம்பிரதாயபூர்வமாய் ஆரம்பித்து அறப்பள்ளியாக்கினார். 11.05.99 இல் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் பள்ளி பதிவு செய்யப்பட்டது. (பாடசாலை ஆரம்பித்து இரண்டு மாதங்களில்)


### போதிக்கும் பாடங்கள்

இப் பாடசாலையில் இக் கிராமத்துப் பிள்ளைகள் மட்டுமன்றி அயல் கிராமங்களிலிருந்தும் பிள்ளைகள் வந்து கற்கிறார்கள். இங்கு பண்ணிசை, சைவசமயபோதனை, குறள் மனனப்பயிற்சி, மிருதங்கப் பயிற்சி என வாரத்தில் இரு நாட்கள் (வெள்ளி, சனி) போதனைகள் இடம்பெறுகின்றன. வருடாவருடம் பரிசளிப்பு விழா நடைபெறும். எழுத்துப்பரீட்சை, பண்ணிசைப்பரீட்சை, குறள் மனனப்போட்டி, பேச்சுப் போட்டி என நடாத்தி சித்தி பெற்றவர்களுக்குச் சான்றிதழ்களும், பரிசில்களும், தங்கப்பதக்கங்களும், கேடயங்களும் வழங்கப்படுகின்றன.

இதைவிட வாணி விழாவையொட்டி எழுத்து, பண்ணிசைப்பரீட்சைகளோடு தோரணம் கட்டல், மாலைகட்டல், கோலம்போடல் போன்ற போட்டிகளும் நடத்தப்பட்டு சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை நிகழ்வுகள்












மேலும் நால்வர் குருபூசைத்தினங்களும், நாவலர் குருபூசையும்,எளிமையாக இங்கு கொண்டாடப்படுகின்றது. இங்கு நடைபெறும் பாடபோதனைகள் யாவும் இந்து சமய அலுவல்கள், திணைக்களம் அனுப்பிவைத்துள்ள பாடவிதானத்துக்கு அமையவும் மேலதிகமாகவும் மேற்கொள்ளப்படுகின்றன.

இப்பாடசாலையை நடாத்துவதற்கு என திணைக்களத்திடம் இருந்து நிதிஉதவி இதுவரை கிடைத்ததில்லை. இருதடவைகள் நூல்கள் வழங்கப்பட்டன. அவற்றைக் கொண்டு நூல்நிலையம் ஒன்றும் உருவாக்கியுள்ளோம். ஒரு சுருதிப்பெட்டியும் இரு தாளங்களும் வழங்கப்பட்டுள்ளன.

## பெற்றோர் ஆசிரியர் சங்கம்

ஆரம்பித்த வருடத்திலிருந்து மாணவர் தொகை அதிகரிக்கவே மாணவர்களின் பெற்றோர்களைக் கூட்டி பெற்றோர் ஆசிரியர் சங்கமொன்று அதிபரைப் போஷகராகக் கொண்டு அமைக்கப்பட்டது. இச் சங்கத்தின் தலைவர் கிராம அலுவலர் திரு.வி.சுந்தரலிங்கம், செயலா திரு.க.நகுலேந்திரன் பொருளாளர் திரு.க.சண்முகரட்ணம் ஆகியோரின் உதவி இங்கு குறிப்பிடத்தக்கது. பரிசளிப்பு விழாக்களின் போது நிதி திரட்டித்தரல் விழாவைச்சிறப்புற நடாத்துவதற்கான சகல உதவிகளையும் செய்வதற்கு இவர்கள் பின்நிற்பதில்லை.

## ஆசிரியர்கள்

இங்கு கடமையாற்றும் ஆசிரியர்கள், தொண்டர்கள் என்றே கூறவேண்டும். சிறு அன்பளிப்பைத் தவிர ஊதியம் என பெரிதாக அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. தற்போது அதிபர் உட்பட நான்குபேர் இங்கு அறநெறிக்கல்வியின் பல்வேறு பிரிவுகளைப் போதிக்கிறார்கள். பள்ளி ஆரம்ப காலத்திலிருந்தே செல்வி.வத்சலா செல்வத்துரை பண்ணிசை, இசை ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார்.

இவர் யாழ் பல்கலைக்கழக இசைப்பட்டதாரி, யா/சம்பத்தரிசியார் கல்வரி இசையாசிரியை. செல்விகள் எஸ்.அருட்செல்வி, பு.மதிவதனி ஆகிய இருவரும் ஜீ.சீ.ஈ உயர்தரம் சித்தியெய்திய தொண்டர் ஆசிரியர்கள். இவர்களுக்கு முன்னர் செல்விகள் த.சிவசக்தி, த.அனுசூயா ஆகிய இருவரும் இங்கு தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றினார்கள்.

ஆரம்ப காலத்தில் யாழ்/ பல்கலைக்கழக நுண் கலைப்பீட நடனத்துறை விரிவுரையாளர் செல்வி அருட்செல்வி ராஜேந்திரம் எங்கள் பாடசாலை மாணவர்களுக்கு நடனப் பயிற்சி அளித்தமை இங்கு குறிப்பிடவேண்டியதொன்றாகும். தற்போது இப்பணியை புகழ்பூத்த நடன ஆசிரியர் கீதாஞ்சலி நல்லையாவின் மாணவி திருமதி கலா மனோகரன் ஆற்றுகின்றார். மாணவர்களுக்கு மிருதங்க பயிற்சியை யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன் செல்வன் S. வரோதயன் அளித்தமை குறிப்பிடத்தக்கது.

## *அறப்பள்ளியை ஊக்குவிக்கும், ஊக்குவித்த உதவிக்கரங்கள்*

பாடசாலை ஆரம்பித்த காலத்தில் இக்கிராமத்தின் ஆசிரியை திருமதி. ஸ்கந்தகுமாரி இராமலிங்கம் தொடர்ந்து இருவருடங்களுக்கு மாதாமதம் ஒரு தொண்டர் ஆசிரியருக்கு வழங்கத்தக்க சிறுதொகை நிதியை அன்பளிப்புச் செய்தமை நன்றி கூறத்தக்கது.

பிரம்படியில் வசிக்கும் வர்த்தகர் திரு.வல்லிபுரம் தம்பிராசாவும் சுமார் ஒரு வருடகாலம் சிறு தொகை நிதியை தொடர்ந்து மாதாமாதம் அன்பளிப்புச் செய்தமை வரவேற்கத்தக்க தொன்றாகும்.

வெளிநாடுகளில் இருந்து வந்த இக் கிராமத்தைச் சேர்ந்த நலன் விரும்பிகள் தங்கள் கிராமத்தின் அறப்பள்ளிக்கு வருகை தந்து செய்த உதவியாலேயே பள்ளி ஆசிரியர்களுக்கு மாதா மாதம் அன்பளிப்பாக ஒரு சிறுதொகைப் பணம் வழங்கக்கூடியதாகவுள்ளது.

சின்னத்தம்பி செந்தில்குமரன் அவரது சகோதரி திருமதி.ரஞ்சிதமலர் பாலசுப்பிரமணியம், பாலசிங்கம் பத்மநாதன், திரு.திருமதி ச.மகேஸ்வரன் ஆகியோரின் உதவிகள் சிறிதானாலும் வள்ளுவர் கூறியது போல காலத்தின் கண் செய்த உதவி ஞாலத்தின் மாணப் பெரிதாகும்.

பரீட்சைக்குரிய வினாத்தாள்களை இலவசமாக அச்சடித்துத் தருமதிருமதி.ம.பூலோகரட்ணத்தை (நாகலிங்கம் ஆசிரியரின் புதல்வி) பாடசாலை சமூகம் என்றும் மறக்க முடியாது.

தளபாட உதவி - இக்கிராமத்தைச் சேர்ந்த திரு.சுப்பையா விஜயசிங்கம் 2003ம் ஆண்டு முப்பதினாயிரம் ரூபாவுக்கு புதிய வாங்கு மேசைகள் செய்வித்து அன்பளிப்புச் செய்துள்ளார்.

அமரர் கதிரவேலு பரமசாமிஞாபகார்தமாக அவரது சகோதரர் திரு.கதிரவேலு சண்முகலிங்கம் (கனடா) அனுப்பிய இருபத்தையாயிரம் ரூபாவுக்கு (25,000) வாங்கில் மேசைகளும் பத்தாயிரம் ரூபா பெறுமதியானநூல்களும் அன்பளிப்புச்செய்யப்பட்டன. நூல் நிலையத்திற்கு ஒருஅலுமாரியும் வழங்கப்பட்டது.

டாக்டர் நவரத்தினமும் அவரது துணைவியார் அன்னலட்சுமியும் அலுமாரி ஒன்றும், இரு கதிரைகளும், சில சந்தர்ப்பங்களில் சிறு நிதியும் அன்பளிப்புச் செய்ததோடு பாடசாலையின் வளர்ச்சிக்கான ஆலோசனைகளையும்டாக்டர் நவரத்தினம் அவர்கள் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. வட்டுக்கோட்டையில் இருந்து ஆலய நிர்வாகசபைப் பொருளாளராக இருந்த திரு.பே.சோமசேகரத்தின் சகோதரிகள் நூல்நிலையத்திற்கு ஒரு அலுமாரி அன்பளிப்புச் செய்துள்ளனர்.

பெற்றோர் ஆசிரியர் சங்கச் செயலாளர்திரு.க.நகுலேந்திரன் பிளாஸ்ரிக்பாய்களும், பொருளாளர் திரு.ந.சண்முகரட்ணம் பாலர் வகுப்பினர்க்கு பிளாஸரிக் கதிரைகளும் இதைவிட இப்பாடசாலையில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்களில் ஒருவர் மாதாமாதம் தரும் மிகச் சிறுதொகை நிதியும் பாடசாலைத் தேவைகளை ஓரளவு பூர்த்தி செய்ய உதவுகின்றது.

வருடாவருடம் நடைபெறும் பரிசளிப்பு விழா பாடசாலைக்கு நிலையான பணம் எதுவும் இல்லாததால் வசதியான மாணவர்களின் பெற்றோர்களிடமிருந்தும், கிராமத்து சைவாபிமானிகளிடமிருந்தும் திரட்டப்படும் நிதி மூலம் விமரிசையாகக் கொண்டாடப்படும். ஞாபகார்த்த தங்கப்பதக்கங்களும் பலர் வழங்கியுள்ளனர்.

## ஆங்கில போதனை

எங்கள் பாடசாலைக்கு வரும் மாணவரில் பெரும்பாலானோர் இடம்பெயர்ந்து இங்கு வசிப்பவர்கள். தங்கள் தங்கள் சொந்த இருப்பிடங்களை விட்டு வந்ததால் பல வசதிக் குறைபாடுடையவர்கள். இத்தகையவர்களுக்கு இலவசமாக ஆங்கில போதனைகளையும் வழங்க

நாம் முடிவு செய்து கடந்த டிசம்பர் மாதம் 5ஆம் திகதி முதல் ஒரு ஆங்கில ஆசிரியையை நியமித்து இங்கு ஆங்கிலக் கல்வியும் சிறாருக்கு தர்மப்பணியாக இடம்பெறுகிறது. இவர்கள் சிறுவயதிலேயே ஆங்கிலம் பேச, எழுதப்பழகினார்களானால் உயர்கல்விக்கு உதவியாகும் என்பதே எமது நோக்கமாகும். இப்பணியை

திரு. ந. மகேந்திரன்
திரு. க. கோணேஸ்வரன்
திரு. இ. தவக்குமார்
திரு. பீ. கருணாநிதி
திரு. இரா. பீதாம்பரம
திரு. து. செந்தூரன்
திரு. திருமதி. பூலோகரட்ணம்

ஆகியோர் ஊக்குவிக்க முன்வந்துள்ளமை நன்றியோடு வரவேற்கத்தக்கது.

## பரிசளிப்பு விழாவுக்கு 1999ல் இருந்து தங்கப்பதக்கம் வழங்கியவர்களின் பெயர் விபரங்கள்

(1) திருமதி .கு. சசுஷ்முகடாஸ் ~1999, 2000ஆம் ஆண்டுகளில் பெற்றோர் ஞாபகார்த்தமாகபின் இன்றுவரை சகோதரர் அமரர்.க.பரமசாமி ஞாபகார்த்தமாக

(2)திருமதி.அன்னலட்சுமி நவரட்ணம் ~ தந்தையார் ஷேக்ஸ்பியர் நாகலிங்கம் ஞாபகார்த்தமாக

(3)திருமதி.ம.பூலோகரட்ணம்~தந்தையார் அமரர்.க.நாகலிங்கம் ஆசிரியர் ஞாபகார்த்தம்

(4)திரு.சி.சண்முகாநந்தன்~ தந்தையார் அமரர்.S.சின்னராசாஞாபகார்த்தமாக

(5)திரு.இ.ரஞ்சன் (கனடாவிலிருந்து)

(6)திரு.வ.தம்பிராசா ~ தந்தையார் அமரர்.வல்லிபுரம் ஞாபகார்த்தமாக

(7)திரு.பா.பத்மநாதன்~தந்தையார் அமரர் பாலசிங்கம் ஞாபகார்த்தமாக

(8)திரு.சி. செந்தில்குமரன் தந்தையார் அமரர்.சின்னத்தம்பி ஞாபகார்த்தமாக

(9)திரு.கந்தையா மகேசன்~தாயார் அமரர்.மகேஸ்வரி ஞாபகார்த்தமாக

(10)திரு.சீ.உதயகுமார் குடும்பத்தினர் அமரர்.உதயகுமார்(கலட்டிக்கண்ணன்)ஞாபகார்த்தமாக இரண்டு வருடங்கள் வழங்கியுள்ளனர்.

ஆலயம் பதினாறாயிரம் நாட்டலிலும் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் கோடி புண்ணியம் என மகாகவி சுப்பிரமணியபாரதியார் கூறியதற்கிணங்க எந்தவித நிதி வைப்புமின்றி ஆரம்பிக்கப்பட்டு பல ஆண்டுகளாக நடாத்தப்பட்டுவரும் அறப்பள்ளிக்கு உதவி ஆக்கமும் ஊக்கமும் அளித்த அளித்துவரும் மேற்குறிப்பிட்ட சைவாபிமானிகளுக்கு கோடிபுண்ணியம் கிட்ட ஞானவைரவப்பெருமான் அருளுண்டு.

மேலும் வைரவராலய உரிமையாளரும் ஆலய நிர்வாகசபைப் போசகரும் அறப்பள்ளி நடைபெறும் இல்ல வளவு உரிமையாளருமான திரு.க.ஆனந்தகுமாரராஜா அவர்கள் தனது இல்லத்தில் பாடசாலையைத் தொடர்ந்து நடாத்த உரிமை வழங்கியுள்ளதோடு பாடசாலையின் தேவைக்கு உதவ முன்வந்திருப்பதும் எம்பெருமான் ஞானவைரவரின் அருளேயாகும். அவனன்றி ஓரணுவும் அசையாதல்லவா?

### மாணவர்களின் சாதனைகள்

எமது பாடசாலையில் கற்கும் மாணவர்கள் பாடசாலைகயில் நடைபெறும், போட்டிகளில் பங்குபற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதோடு

மட்டுமன்றி யாழ்குடாவில் எங்கெங்கு சமயப்பரீட்சைகள் நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் சென்று பங்குபற்றி நல்ல பரிசில்களையும் பதக்கங்களையும் பெற்று வந்துள்ளனர்.

சைவபரிபாலனசபை, விவேகானந்தர்சபை, சாந்தையர்மடம் கற்பகவிநாயகர் அபிவிருத்திக்கழகம் முதலிய நிறுவனங்கள் நடாத்தும் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. கடந்தாண்டு கற்பகவிநாயகர் ஆலய அபிவிருத்திக்கழகப் பொன்விழாவில் எம்மாணவர்கள் கலை நிகழ்சிகள் வழங்கி யாவரதும் பாராட்டைப் பெற்றனர்.

2000ஆம் ஆண்டு துர்க்காமணி மண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் எடுக்கப்பட்ட அறநெறிப் பெருவிழாவில் எங்கள் மாணவர்கள் பங்குபற்றி திருமுறை ஓதியமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

செல்வச்சந்நிதி ஆலய கலை பண்பாட்டுக்கழகம் வருடாவருடம் நடாத்தும் திருவாசகப் போட்டியில் எங்கள் மாணவர்கள் பங்குபற்றி முதலிடங்களைப் பெற்று பரிசிலும் தங்கப்பதக்கமும் பெற்றுள்ளமை பாராட்டத்தக்கது.

1999ஆம் ஆண்டு இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய இந்து சமய போட்டிப் பரீட்சையில் கீழ்ப்பிரிவில் 03 மாணவரும் மத்திய பிரிவில் 16 மாணவர்களும் மேற்பிரிவில் 01 மாணவரும் சித்தியடைந்துள்ளனர். இவர்களில் மத்திய பிரிவைச் சேர்ந்த செல்வி.பே.மாலினி இப் பரீட்சையில் யாழ் மாவட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார். இவருக்கு திணைக்களம் சான்றிதழோடு பணப்பரிசும் வழங்கியது. சித்தியடைந்த ஏனையவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கியுள்ளது.

**தங்கப்பதக்கம் பெற்றவர்கள்**

பாடசாலை ஆரம்பித்த காலத்திலிருந்து நடாத்தப்பட்ட பரிசளிப்பு விழாக்களில் அதிகூடிய புள்ளிகள் பெற்று தங்கப்பதக்கம் பெற்ற மாணவர்கள்:

(1) செல்வன் ச. கஜலக்க்ஷன்
(2) செல்வி சு. மைவிழி
(3) செல்வி ம. சுபாஜினி
(4) செல்வன் வீ. அரவிந்தன்
(5) செல்வன் க. சாயிசங்கர்
(6) செல்வி ச. லக்க்ஷிகா
(7) செல்வி செ. ஜீவிதா
(8) செல்வன் செ. செந்தூரன்
(9) செல்வி சு. கஜீனா (2 தடவைகள்)
(10) செல்வி ஜெ. சைந்தவி
(11) செல்வி ர. ஆரணி (2 தடவைகள்)
(12) செல்வன் ஶ்ரீ. பார்த்தீபன்

**2004ம் ஆண்டுக்குரிய தங்கப்பதக்கம் பெறும் மாணவர்கள்**

செல்விகள் சி ஜெயசக்தி, வி.துஜீவா

கல்வித்திணைக்களகத்தினால் கடந்த ஆண்டு நடாத்தப்பட்ட அறநெறிப் பாடசாலைகளுக்கான இறுதிப்பரீட்கையில் (ஆண்டு 11க்கு) எங்கள் பாடசாலையின் தொண்டா சிரியரான செல்வி த.சிவசக்தி, மாணவி செ. ஜீவிதா ஆகிய இருவரும் சித்தியடைந்து சான்றிதழ் பெற்றுள்ளனர்.

இவ்வாறு முன்னேறிவரும் எம்மாணவர் திணைக்களம் புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள 'தர்மாசிரியர்' பரீட்சைக்கும் தகுதியாகி எழுதுவார்களானால் அது வேலைவாய்ப்புக்கும், உயர்கல்வி பெறவும், வாய்ப்பளிக்கும் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

மேன்மைகொள் சைவநீதியை அறிந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிவகுக்கும் இவ்வறப்பள்ளி வளர உதவிய உதவும் செவஉள்ளங்களுக்கு ஞானவைரவர் அருளும் எம் நன்றியும் என்றென்றும் உண்டு.

~அதிபர்~

# செவிக்கு உணவாகும் இசை நோய் தீர்க்கும் அருமருந்து

செல்வி வத்சலா செல்வத்துரை ~ நுண்கலைமானி இசையாசிரியை யாழ்/ சம்பத்தரிசியார் கல்லூரி,
பண்ணிசை இசை ஆசிரியை ~ தலையாழி ஞானவைரவர் ஆலய அறநெறிப்பாடசாலை

இசை என்பது மக்களின் மனத்திற்கு மகிழ்ச்சியை அளிக்கும் தன்மையுடையது. வடமொழியில் 'சங்கீதம்' என்று கூறப்படும். சங்கீதரத்னாகரம் போன்ற இசை லஷண நூல்களில் கீதம், வாத்தியம், நிருத்தியம் என்னும் மூன்றின் சேர்க்கையே சங்கீதம் என்று கூறப்படுகின்றது. இவை முறையே வாய்ப்பாட்டு கந் நடனம் என்னும் மூவகை இசையினையும் குறிக்கின்றன.

இவ்வகைச் சிறப்பான கலை மனிதர்களுக்கு இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. கோவில்களிலும் பாரம் பரியமாகவே பயன்படுத்தப்பட்டு வருவது கண்கூடாகும். இசையானது மனிதர்களின் பண்பாட்டில் மட்டுமன்றி உடல்நல வளர்ச்சிக்கும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இசையின் மூலமாகஉயிரினங்களின் சில நோய்களைக் குணப்படுத்தலாம் என்பதைத் தற்கால விஞ்ஞானிகளும் ஒப்புக் கொள்கின்றனர்.

நம் நால் வேதங்களிலும் இசை விரவிக் காணப்படுகின்றது. குறிப்பாக ஸாமவேதம் சிறப்பான இசைவடிவமே ஆகும். இதற்கு ஸாம கானம் என்று பெயர் கொண்டே அமைந்திருப்பது சிறப்பாகும். 'கேட்போர் உள்ளத்தை உருக்கி வேண்டும் பொருளை அளிக்கவல்லது' என்று பொருள்படும். இலங்கை வேந்தன் இராவணேஸ்வரன் சாமகானம் வீணையில் இசைத்து இறைவனருள் பெற்றமை இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது. வேதங்கள் போன்றே இசையும் யோகத்தன்மை அளிக்கவல்லது. ஆன்மஈடேற்றத்திற்கு நான்கு வேதங்கள் மார்க்கமாக அமைவது போன்று இசையாகிய காந்தர்வ வேதமும் 'சங்கீத யோகம்' என்னும் சிறப்புடையது. ஆன்மாக்களின் ஈடேற்றத்துக்கு பிராணயாமம், ஜெபமஎன்பவை உதவுவது போல இசையும், நாதோபாசனையாக உதவுகின்றது.

எனவே இசை வாழ்வியலிலும் முக்கிய பங்காற்றுகின்றது. குறிப்பாக இசையில் அமைந்துள்ள இராகங்கள், இசைக்கருவிகளில் இசைக்கப்படும் இசை என்பன மனித உடல்நலத்திற்கு உதவுகின்றன. எடுத்துக்காட்டுக்களாகக் குறிப்பிட்ட இராகங்களும், இசைக்கருவிகளும், குணப்படுத்துகின்ற நோய்களும், கீழே இடம் பெற்றுள்ளன. அவை வருமாறு,

## (01) இராகங்கள்

அ) இந்துளம்~ வாதம் சம்பந்தமான நோய்களைக் குணப்படுத்துகின்றது.

ஆ) பைரவி~ஆஸ்துமா (ஜிலேஸ்மம்) போன்ற நோய்களைக் குணப்படுத்துகின்றது.

இ) அஸாவேரி ~தலைவலி போன்ற நோய்களைக் குணப்படுத்துகின்றது.

ஈ) பிலஹரி, நாட்டை என்பன~சோம்பல் தன்மையை நீக்கிப் புத்துணர்ச்சியை அளிக்கின்றது.

உ)ஹரஹரப்பிரியா~துன்பங்களை மறக்கச் செய்கின்றது.

ஊ)நீலாம்பரி~சாந்த குணத்தையும், மன அமைதியையும், தூக்கத்தையும், அளிக்கின்றது.

## (02) கருவி இசை

அ) மிருதங்கம்–நரம்புத்தளர்ச்சியைக் (தோற்கருவி) குணப்படுத்தி, ஞாபக சக்தி, உற்சாகம் போன்றவற்றை அளிக்கின்றது.

ஆ) புல்லாங்குழல்–நாதஸ்வரம் மனக்கவலையினால் (துளைக்கருவிகள்) உண்டாகும் நோய்களைக் குணப்படுத்தும்.

இ) வீணை – இரத்த அழுத்தம் (நரம்புக்கருவி) போன்ற இருதய நோய்களைக் குணப்படுத்துகின்றது.

உலகில் உயிரினங்கள் தத்தம் உள்ளத்திலுள்ளவற்றை வெளியிட உதவும் சாதனம் மொழி. இம் மொழி ஒலி முதலியவற்றின் தொழிற்பாட்டிலேயே உருவாகின்றது. மக்களிடையே மொழி வேறுபாடுகள் காணப்படினும் ரசிகத்தன்மையில் ஒருமித்த கருத்தை (உணர்வினை) ஏற்படுத்தும் தன்மையை இசை கொண்டுள்ளது. பொதுவாக மனித உள்ளங்களை இசைவிக்கும் தன்மையுடையது என்றே கருதப்படுகின்றது. மனிதன் மட்டுமல்ல உயிருள்ள யாவற்றிலும் இசை பல செயற்பாட்டைக் கொண்டுள்ளது என்பது உணரக்கூடியது. கேட்ட மாத்திரத்தில் இன்புறச் செய்யும் திறன் இசைக்கே உண்டு. இது பற்றிய செய்திகளைப் பல்வகையான நூல்கள் மூலமாகவும், அன்றாட வாழ்க்கை அநுபவங்களாலும் நாம் உணர முடிகின்றது.



# தர்ப்பணம் திவசம் எதற்கு?

**பித்ரு கடன்கள் செய்யத்தான் வேண்டுமா? என்று சிலர் இன்று கேட்கின்றார்கள்? சிலர் மூடநம்பிக்கை என்கிறார்கள்? சிலர் இதன் பலாபலன்களை அறியாதுள்ளனர் - இவர்களுக்கு நல்ல விளக்கம் தருகிறார் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதீச்வர ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.**

பித்ரு அதாவது இறந்தவர்களுக்குச் செய்யும் காரியங்களுக்கு 'சிரார்த்தம்' என்று பெயர். சிரார்த்தம் அதாவது திவசம் தர்ப்பணம் செய்வது, இதைச் சிரத்தையுடன் செய்வது முக்கியம். ரொம்பவும் சிரத்தை எடுத்துச் செய்தால் அது சுருக்கியும், குறுக்கியும் சிரார்த்த காலம் (திதி) தப்பியும் செய்வது போலில்லாது முறையாக விஸ்தாரமாக புஸ்களமாக நடக்கும். அதன் பலனும் பிரத்தியட்சமாகத் தெரியும். மடத்தனமான போக்கு என நினைத்து இப்போது பெரும்பாலானோர் ஏதோ ஒப்புக்காகத் தான் பித்ரு காரியங்கள் பண்ணுகின்றார்கள். அதன் விபரீத பலன் எதுவெனில் அநேக வீடுகளில் சித்தப்பிரமை, காக்காய்வலி, ரத்தவியாதிகள் தோல்வியாதிகளுடன் அநேகர் அவஸ்தைப்பட்டுக் கொண்டு ஜோஸ்யர், மாந்திரிகர் முதலானோரிடம் அலைகின்றனர். இக் கஷ்டங்களின் முக்கியமான காரணம் பித்ரு காரியம் விட்டுவிட்டது தான்.

மாதா பிதாக்கள் உயிருடன் இருக்கும் போது செய்வது மக்களைக் காக்குமென்றால் இன்னொருபக்கள் மாதா பிதாக்களது உயிர் போனபின் அவர்களுக்காக மக்கள் செய்யாதது மக்களைத் தாக்குமென்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

**எக்ஸ்சேஞ் பாங் மாதிரி பித்ரு தேவதைகள்**

அப்பாவும், அம்மாவும் மற்ற வம்ச முதல்வர்களும், எங்கேயாவது கோபித்துக் கொண்டு சபிப்பார்பளா என்று கேட்கக்கூடாது. பித்துருக்கள் சபிக்காமல் இருக்கலாம். ஆனால் பித்ரு தேவதைகள் இருக்கின்றார்களே அவர்கள் இந்தப் பின் தலைமுறையினர் தங்கள் மூலமாக முன்னோர்களுக்கு எள்ளோ, தண்ணியோ, அன்னமோ அளிக்கவில்லையே என்பதைப் பார்த்துச் சபித்துவிடுவார்கள். ஆனபடியால் நாமும் நம்பின் சந்ததிகள் நன்றாயிருக்கவே முன்தலை முறையினருக்கு திவச தர்ப்பணாதிகள் பண்ணத்தான் வேண்டும். அதாவது இங்கே பரோபகாரத்தோடு சுய உபகாரமும் சேருகிறது.

திவசமும், தர்ப்பணமும் செய்கின்ற போது பூலோகத்திலோ வேறு எங்கோ எந்த ரூபத்திலோ பிறந்திருக்கின்ற நம் மூதாதைகளுக்கு அது சேமத்தைக் கொடுக்கிறது. இங்கே நாம் கொடுக்கிற எள், தண்ணீர், பிண்டம் முதலானவைகளை பித்ரு தேவதைகள் நம் மூதாதைகள் எந்த ரூபத்தில் எங்கே பிறந்திருந்தாலும், அதற்கேற்ற ஆகாரமாக மாற்றி அங்கே கிடைக்கச் செய்து விடுவார்கள். நம் நாட்டு

ரூபாய் வெளிதேசக் கரன்சியாக்க எக்சேஞ் பாங் இருக்கிற மாதிரி பித்ரு தேவதைகள் இப்படி ஆகாரத்தை மாற்றிக் கொடுக்கிறார்கள். செத்துப் போன உடனேயே எல்லோரும் மறுபடியும், இந்தப் பூலோகத்திலேயே பிறந்து விடுவதில்லை.

### நரகமும், சுவர்க்கமும்

நன்றாக வேலை செய்தால் இங்கிரமென்ட் மட்டுமல்லாமல் போனஸ்சும் தருகின்றார்கள் அல்லவா? ரொம்ப நன்றாகச் செய்தாலோ பிரமோஷனே கொடுத்து மேலே தூக்கி விடுகின்றார்கள். வேலையில் தப்புப்பண்ணினால் இக்கிரமென்டை நிறுத்தி விடுகிறார்கள். அபராதம் விதிக்கின்றார்கள். ரொம்ப மோசமாகப் பண்ணினால் கீழ் வேலைக்கே தள்ளி விடுகிறார்கள். இதேபோல் புண்ணியம் பண்ணியவர்களுக்கு இன்கிரமென்ட் மாதிரி இந்தப் பூலோகத்திலே சௌக்கியமான இன்னொரு ஜன்மம் கிடைப்பதற்கு முன்னாடி ஒரு போனஸ் கிடைக்கின்றது. சுவர்க்க வாசம் தான் இந்த போனஸ். ரொம்ப புண்ணியம் செய்திருந்தால் சுவர்க்கலோகத்துக்கே நிரந்தரமான ப்பிரமோஷன். இப்படியே பாவம் பண்ணியவர்கள் முதலில் அபராதமாக நரகலோகத்தில் வசிக்க வேண்டும். அப்புறம் இன்கிரிமென்ட் இல்லாத மாதிரி பூலோகத்திலே கஷ்டத்திலே இருக்க வேண்டும். ரொம்பப் பாவம் பண்ணினால் கீழ் வேலைக்கே போக வேண்டியது. அதாவது நிரந்தர நரகவாசம்.

### திவசத்தின் பலன்

தர்ப்பணம் திவசம் இவற்றின் பலன் நரகலோகம் தவிர மற்ற லோகங்களில் உள்ளவர்களையே சேரும். ஸ்வர்க்கத்திலே பல திவுசுகள், பல லோகங்கள், தேவலோகம், கந்தர்வலோகம், வித்தியாதரர் லோகம், பிரம்மலோகம விஷ்ணு லோகம், சிவலோகம், சத்தியலோகம், என்று இப்படி நரகத்திலும் தாமிஸ்ரம், அந்ததாஸ்ரம், புத், ரௌரவம் என்று பலவுண்டு. நாம் இறைக்கிற எள்ளும் தண்ணீரும் கொடுக்கிற பிண்டமும் இப்படிப்பட்ட லோகங்களிலுள்ள நரகவாசிகளுக்குப் போய்ச் சேராது.

ஒரு தேசத்திற்கும் இன்னொரு தேசத்திற்கும் சண்டை ஏற்பட்டுவிட்டால் அப்போது பணம் எக்ஸ்சேஞ் பண்ணி எதிரி தேசத்திற்கு அனுப்பவே முடிவதில்லை அல்லவா, இப்படி நரக வாசிகளுக்கும் பித்ரு தேவதைகள் ஆகார எக்ஸ்சேஞ் பண்ணுவதில்லை.

இப்படிப்பட்ட நரகவாசிகளான மகாபாபிகளிடமும் நம்முடைய ரிஷிகளுக்கு மனசுருகி அவர்களுக்கும் சேமம் உண்டாவதற்காக மந்திர பூர்வமாக சில வஸ்த்துக்களைக் கொடுக்கச் சொல்லி ஏற்பாடு பண்ணியிருக்கிறார்கள். சுத்தமான வஸ்த்துக்களை நாம் அவர்களுக்குச் சேர்க்க முடியாது. ஆனால் சில அசுத்த வஸ்த்துக்களே அவர்களுடைய மகாகஷ்ட நிலையில் ஆகாரமாக அவர்களுக்குக் கிடைக்கலாமென்று பகவான் வைத்திருக்கின்றான்.

01.நாம் வேஷ்டியைப் பிழிகிற அசுத்த ஜலம்.

02.குளிக்கின்ற போது நம் சிகை வழியாகவருகிற ஜலம்.

சாப்பாடு முடிந்தபின் எச்சில் ஜலத்தை இலைக்கு வலது பக்கத்தில் மாத்திரம் சொல்லிவிட்டால் அது நரகங்களிலேயே ரொம்பக் கொடூரமான ரௌரவத்தில் எத்தனையோ கோடி வருஷங்களாக இருப்பவர்களின் தாகத்தை தீர்க்க உதவுகின்றது.

ஆந்திரர்கள் உத்ரா போசனத்துக்குப் பின் இதைத் தவறாமல் பண்ணுகிறார்கள்.

இப்படி எச்சிலையும் அழுக்கு ஜலத்தையம் ஒருவருக்குத் தருவதா என்ற நினைக்க வேண்டாம்.

நரக வாசத்தில் அவர்கள் இருக்கிற ஸ்திதியில் இதுவே தான் அவர்களுக்குப் பிடித்தமானதாக இருக்கும்.

நம் லோகத்திலேயே வராகத்தை (பன்றி) பார்க்கவில்லையா?

நாம் அன்பான பாவனையுடன் இந்த நரக வாசிகளை உத்தேசித்து நம் வஷ்டியை பிழியும் போதும் சிகை ஜலத்தைப் பிழிந்து விடும் போதும் (அதற்கான மந்திரமும் சொல்லி இந்தக் காரியங்கள் செய்ய அதிகாரம் பெற்றவர்கள் அப்படியே செய்ய வேண்டும்) அப்படி அன்போடும் கருணையோடும் செய்தால் அவை நரகத்திலுள்ளவர்களுக்கு ஆகாரமாக மாற்றிக் கொஞ்சம் கொஞ்சம் சுகம் தருகின்ற படிக்கு பகவான் வைத்திருக்கிறார்.

இப்படிப்பட்ட மகா பாவிகளுக்குக் கூட அனுக்கிரகம் பண்ணுகிறது நம் தர்ம சாஸ்திரம்.

(தெய்வத்தின் குரல் 3ம் பகுதி)

# சைவப்பழத்திற்கு சைவ பரிபாலன சபை எடுத்த பெருவிழா



06.03.2005 ஞாயிற்றுக்கிழமை நாவலர் ஆச்சிரம மண்டபம் இதுவரை இல்லாத வகையில் விழாக்கோலம் கொண்டிருந்தது. சைவ பரிபாலனசபை 50 வருடங்களாக தன்னை சைவத்திருப்பணிக்கு அர்ப்பணித்த சைவப்பழத்தின் பணி நலன் பாராட்டும் மகத்தான விழாவை நடாத்திக்கொண்டிருந்தது. மண்டபம் சைவ அபிமானிகளால் நிறைந்து வழிந்தது இந்த சைவப்பழம் வேறுயாருமல்ல. சைவப்புலவர் கந்தசாமி ஐயா அவர்களே! இந்த ஆசிரியப்பெருந்தகை மேன்மைகொள் சைவ நீதி தழைக்க சைவ பரிபாலன சபை உட்பட பல்வேறு சைவ ஸ்தாபனங்கள் ஆலயங்கள் ஆகியவற்றின் உறுப்பினராக, தலைவராக, செயலாளராக, பரீட்சை முதல்வராக ஆற்றிய அரிய பணிகள் அறிஞர் பெருமக்களால் போற்ற பேசப்பட்டன. மலர்மாலைகள் சிரம் தெரியாதவாறு அணிவிக்கப்பட்டன. பதக்கம் சூட்டப்பட்டது. பரிசில்கள் வழங்கப்பட்டன. அவர் பாதம் பணிந்தெழுந்தனர் பலர்.

இவற்றுக்கெல்லாம் இறுதியில் பதிலளித்த நடை உடைபாவனைகளில் சைவ ஆசாரத்தில் என்றும் எளிமையாக வெளிப்பகட்டற்ற தொண்டனான கந்தசாமி ஐயா கூறினார் நீங்கள் எடுத்த இந்த விழா எனக்குரியதல்ல சைவத்திற்கு எடுத்த விழாவாகும் நானசைவப்பணியாற்ற இறையருளோடு பெரியார் இருவரின் ஆசிகளே உதவின. ஒருவர் கொழும்புத்துறை முனிவர் சிவயோகசுவாமிகள் அடுத்து துறவியான ரிஷி கேசத்திலுள்ள எனது சகோதரர் இவர்களின் அருளாசியும் வழிகாட்டலுமே என் பணிக்கு வழிவகுத்தன.

இன்றைய இளம் தலைமுறையினருக்கு நான் விடுக்கும் பணிவான வேண்டுகோள் பெரியோர் ஆசி பெறுங்கள்! மூத்தோர் சொல் கேளுங்கள் மனம். வாக்கு, காய, சித்தியோடு பேசுவதைக் குறைத்து செயற்படுங்கள்.

இவ்வாறு மௌனத்தோடு பல இன்னல்கள் மத்தியிலும் என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற முனைப்போடு சைவப்பணி ஆற்றிய கந்தசாமி ஐயா ஒரு வேண்டுகோள் விடுத்தார். "மூத்தோர் வார்த்தை அமிர்தம்" என்பதை உணர்த்திய இப்பெரியாரின் வேண்டுகோளை ஏற்று இன்றைய இளம் தலைமுறையினர் செயற்படின் கலாசார சீரழிவுகள் பஞ்சமாபாதகங்கள் ஆகியன அகன்று நாட்டில் அமைதியும் சுபீட்சமும் நிலவும் அல்லவா?

சொல்லுக்குறுதி பயக்கும் நாலடியார், திருக்குறள் ஆகியனவும் அறச் சிந்தனைகளை அள்ளி வழங்கும் அறகக்கருவூலங்களாகும். நம் முன்னோர் பாலர் தொட்டுப் பாட்டாவரை இவற்றைக் கற்று மனனம் பண்ணி மனங்கொண்டதால் இவை அவர்கள்

தருமம்

# தக்க சமயத்தில் உயிர்காக்கும்

"அரிது அரிது மானிடராகப் பிறத்தல்"

என்றார் எம்பெருமான் விநாயகருக்குப் பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் ஆகிய நான்கையும் கொடுத்து இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றையும் பெற்ற தமிழ் முதாட்டி. இந்த மகத்தான மனிதப் பிறவி எடுத்த ஒவ்வொருவரும் வையத்துள் வாழ்வாங்கு வாழ அறநெறியே துணையாகின்றது. ஊன்றுகோலாகிறது. இந்த அறநெறி வாழ்வில் இருந்து ஒருமனிதன் விலகுவானானால் அவனுக்கும் விலங்குக்கும் வேறுபாடே கிடையாது. அறவாழ்வு மனிதனை மனிதனாக வாழ வழிகாட்டி தவறான வழியில் செல்லாது தடுத்து நிறுத்தி நேரிய பாதையில் செல்ல உதவி அவனை உயர்ந்த உள்ளத்தவனாக உயர்த்துகிறது. எத்தனை பட்டம் பதவிகளோடு திகழ்ந்தாலும் அற ஒழுக்கங்களில் இருந்து ஒருவன் தவறுவானானால் அவன் விலங்குக்குச் சமானமாவான்.

## மூதாதையர் இட்ட அத்திவாரம்

நம் மூதாதையர்கள் அறப்பணி செய்து அறவாழ்வு வாழ்ந்தவர்கள். அப்பெருந்தகைகள் இட்ட அறநெறி அத்திவாரம்தான் இன்றுவரை நம் இனத்தை அழியாது காத்து வருகிறது எனில் மிகையாகாது. இந்த அறவாழ்வின் இன்றியமையாமையை உணர்ந்தே தண் தமிழ்ச் செல்வி ஔவையார் அறநெறிச் சிந்தனைப்பொக்கிஷங்களான ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி ஆகியவற்றைத் தந்துள்ளார். அவற்றோடு

நெஞ்சில் நீங்கா இடங்கொண்டு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்களுக்குதவி நல்வழிப்படுத்தின. நல்லவர்களாக வல்லவர்களாக வாழ வழிகாட்டின.

இன்றைய காலகட்டத்தில் மனனம் செய்யும் பழக்கம் அருகி வருவதால் இளம் சந்ததியினர் இந்த அறநெறிப் பொக்கிஷங்களைத் தமதாக்கிக் கொள்ளும் மனப்பான்மையற்றவர்கள் ஆகிறார்கள். இதனால் அவர்கள் வாழ்வில் பல அனர்த்தங்களைச் சந்திக்க வேண்டியவர்கள் ஆகின்றார்கள். இவ்வறச்சிந்தனைகள் நம் தேமதுரச் செந்தமிழிலேயுள்ளன. இவற்றை நாம் மறந்தோமானால் நாம் தமிழர் என்று கூறிக் கொள்வதில் அர்த்தமேயில்லை. இச்சிந்தனைகளை மீண்டும் உளங்கொண்டு அறநெறி வாழ்வுக்கு ஆதாரமாக்கிக் கொள்ளவேண்டுமானால் மீண்டும் நம் இளம் சந்ததியினரிடத்தில் மனனப்பயிற்சி தலைதூக்க வேண்டும்.

## மூலாதாரம்

இவ்வறச் சிந்தனைகளை நாம் கைவிடின் நாம் பிறந்த நோக்கம் என்ன என்பது தெரியாமல் போய்விடும். எமக்கென ஒரு லட்சியம் குறிக்கோள் ஒன்று இல்லாமல் மீகாமன் இல்லாத கப்பல் போலாவோம். ஆடு, மாடுகளின் வாழ்வு போன்றதொரு வாழ்க்கையே நிலவும் மனிதனுக்கும் விலங்குகளுக்கும் இடையில் உள்ள எல்லைக்கல் கடவுள் நினைவாகும். கடவுள் பற்றிய சிந்தனை, உணர்வு ஒருவனுக்கு இல்லையானால் அவன்

மேதாவியானாலும் மதிப்பிழந்து விலங்கொடு ஒப்பான் அறவாழ்வின் மூலாதாரமே கடவுள் உணர்வாகும். இந்த இடத்திலே நாம் தாயுமானவரை நினைவு கூருவோம்.

"மண்ணாழ்வாரேனும் உனைக்கை தொழாராகில்
அந்த மண்ணாழ்வார் நட்பைமதியேன் பராபரமே"

என்றார் அவர்.

"இறைவனே உன்னை மறந்தால் இறந்தே போவேன்" என்ற அப்பர்திருவாக்கும் சிந்திக்கப்பாலது. அறவழி நாட்டத்தார் இறைவழி நிற்பது திண்ணம் இறைவழி நிற்பவர்மனிதப் பிறவியின்பயனைப் பெற்றுய்வார்

**தருமம் தலைகாக்கும்**

அறநெறி வாழ்வில் தானதருமம் அறக்கொடைகள் முக்கியமானவை. எந்த வழிபாட்டிவும் இல்லாத மகாசக்தி இந்த அறவாழ்வுக்குண்டு. இதைக் கவிஞர் கண்ணதாசன்.

"தருமம் தலைகாக்கும்
தக்க சமயத்தில் உயிர்காக்கும்
கூட இருந்தே குழிபறித்தாலும்
கொடுத்தது காத்து நிற்கும்"

என அறவழி வாழ்வின் அமரத்துவத்தைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

"வீடுவரை உறவு வீதிவரைமனைவி
காடுவரை பிள்ளை கடைசிவரை யாரோ?"

எனக் கேள்விக்கணை தொடுக்கும் கவிஞர் கடைசியில் எம்மோடு கூடவரப் போவது நாம் செய்த தருமமே என்பதை மறைமுகமாக உணர்த்தி நிற்பதை நாம் உணரவேண்டும். அறநெறி வாழ்வின் வெற்றியை நாம் பஞ்சபாண்டவர் வாழ்வில் காண்கிறோம். அறநெறி தவறி அதர்ம வழி நின்ற நூற்றுவரான துரியோதனனாதியோர் மடிந் தொழிந்த வரலாற்றைப் பாரதம் பகர்கிறது. மேலும் நம் நாயன்மார் வரலாறுகள், புராண இதிகாசங்கள், திவ்வியப் பிரபந்தங்கள் முதலியன அறநெறி நின்றவர் எய்திய சிறப்பை எடுத்தியம்புவதைப் படித்தறியலாம்.

இத்தகைய அறநெறிப்பட்ட வாழ்வியல் இன்று ஏன் குன்றியுள்ளது? நம் சமுதாயம் முழுமுதலவக்குக் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை நிலையில்லாதவற்றுக்குக் கொடுத்து அல்லற்படுவதேயாகும். பணத்தையே முழுக் குறிக்கோளாகக் கொண்ட சமுதாயமாக மாறி பண ஆசையும் வெறும் பகட்டும், வெளிநாட்டுக் கலாசார மோகமும் நம் மத்தியில் பலரை ஆட்கொண்டுள்ளன. இதனால் அற வாழ்வுக்குரிய சைவ கலாசாரம், ஆசாரம், பண்பாடு ஆகியன சிதைந்து வருகின்றன. இதனாலேயே இளம் சந்ததியினரிடையே மனமுறிவுகள் நெறி பிறழ்வுகள் கல்விச்சாலைகளில் பிரச்சனைகள், பெரியோருக்கும் சிறியோருக்குமிடையே புரிந்துணர்வோ, பரிந்துணர்வோ இல்லாமை முதலியன தலை விரித்தாடுகின்றன. இதன் விளைவு அறநெறி வாழ்வில் தளர்ச்சி.

எனவே இந்நிலை மாறவேண்டும் ஆன்மீக அடிப்படையில் ஒருவர் வாழ்வு அமையவேண்டும். இதற்கு நாம் தொன்னெறி அறங்கள் கூறும் ஞான உண்மைகளை உணர்ந்து அன்பும் அருளும் கூடிய நல்வாழ்வை அறநெறி வழியில் அமைத்து ஞானியர் கூறிய தியானம் தாய்மை ஆகியவற்றை மேற்கொள்ளவேண்டும். நாற்பாதங்கள் ஆகமங்கள், வேதங்கள் ஆகிய கூறும் ஆன்ம நன் நேயத்தையறிந்து ஆலய வழிபாடு செய்ய வேண்டும். இறைநாமஜெபம் பஜனை ஆகியவற்றைக் கூடிப்பாடி சாஸ்த்திர ஆற்றலையும் இறையுணர்வையும் வழர்க்க வேண்டும்.

இவற்றைக் கைக்கொண்டு அறநெறி இறைபணி என அனைவரும் உணர்ந்து அறவாழ்வு வாழ அத்தன் திருவடி நித்தம் பணிவோமாக.

(08.12.2002ல் நடைபெற்ற கும்பாபிஷேகத்தை முன்னிட்டு அதிபர் திருமதி.கு.ஷண்முகடாஸ் வெளியிட்ட அறநெறி ~1 என்ற நூலில் அவர் எழுதிய கட்டுரை.)

# எனக்குத் தொண்டுள்ளம் தந்த அறப்பள்ளி

முதலில் தொண்டர்களாக இருக்கக் கற்றுக் கொள்ளுங்கள் அதிகாரம் தானே வரும், என்ற விவேகானந்தரின் கூற்றிற்கிணங்க என்னை தொண்டனாக வழிவகுத்து நிற்கும் அறநெறிப் பாடசாலையில் பெற்ற அனுபவங்களை உங்களுடன் பகிரலாம் என நினைக்கிறேன்.

அறநெறிப் பாடசாலை என்பது தனியாக பண்ணிசை வகுப்புகளும், சமய பாடங்களும் கற்பதற்காகத்தான் என்பது நம்பலரின் எண்ணம். ஆனால் அறநெறிப் பாடசாலைகளிலே மனிதன் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு ஏதுவான சமூக விழுமியக் கருத்துக்கள் மொழியப்படுவதுடன் சமுதாயத் தொண்டுகள் செய்வதற்கும் வழி வகுக்கப்படுகின்றது. மற்ற நம்பலர் ஒரு நிகழ்வில் தலைமை தாங்குவதற்கு பின்னிற்றல் இன்றைய காலகட்டத்தில் மலிந்து கிடக்கின்றது. இவற்றை நீக்கும் பொருட்டு நாம் மாணவராக இருக்கும் போது எமது சிறுபராயத்திலே தலைமைத்துவப்பண்பை எம்மிடத்தே வளர்த்துவிட இந்த அறநெறிப் பாடசாலை தவறவில்லை.

இதுமட்டுமல்லாது எம்மிடத்தே நாவன்மை, திருக்குறளண்ணிசை ஓதல், மாலைகட்டுதல், கோலம் போடுதல், போன்ற போட்டிப் பரீட்சைகளை நடாத்தி பல பரிசில்களை வழங்கிவருவதுடன், முதல்பரிசு பெறுபவர்களுக்கு தங்கப்பதக்கங்களும் வழங்குவது குறிப்பிடத்தக்கது.


இங்கு ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடின்றி பலரும் கல்விகற்பதற்கு வழிவகுக்கப்பட்டிருக்கிறது. இதற்காக இலவசமாக வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. அத்துடன் இங்கு நடைபெறும் ஒவ்வொரு விழாக்களிலும் ஒரு மாணவரையும் ஒதுக்காது எல்லோரும் பற்பலநிகழ்வுகளில் கலந்து தமது திறமைகளை வெளிக்காட்ட வழி கோலப்பட்டுள்ளது. மற்றும் அறநூல்கள் போற்றும் அறவோர், நாயன்மார்கள் போன்றோரின் குருபூசை தினங்களை மாணவர்களை கொண்டாட வைத்து அவர்களது தொண்டை செய்யுமாறு எமக்கு எடுத்துக் கூறிவருகின்றது.

இது மட்டுமல்லாது எம் போன்ற மாணவர்களிற்கு கலைகளின் முக்கியத்துவத்தை உணர்த்தி மிருதங்க வகுப்புக்களையும் நடாத்தி வருவதும் முக்கியமான தொன்றாக குறிப்பிடத்தக்கதாகும்.


இவற்றையெல்லாம் வழிமுறை பிசகாது வழிநடத்திவரும் எமது அறநெறிப் பாடசாலை அதிபர் அவர்களின் வழிநடாத்தலின் கீழ் திறம்பட நடந்து கொண்டிருக்கும் அறநெறிப் பாடசாலை மென்மேலும் வளர வேண்டும். பல கலைஞர்களையும், கல்விமான்களையும், உருவாக்க வேண்டும் என்று எம்பெருமான் ஞானவைரவரை வேண்டுகின்றேன்.




ஸ்ரீ. பார்த்திபன்
தரம் - 11
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

# முதன்மை விருந்தினர்களிடமிருந்து
# தங்கப்பதக்கம் பெறும் மாணவர்கள்



Jandas Creations

# அறநெறிக் கல்வி ஏன்?

அறநெறிக் கல்வி இந்து சமுதாயத்திற்கு கிடைத்த ஒரு அரிய கொடை ஆகும். ஆனால் இன்று சமுதாயத்தில் பலர் அறநெறிக் கல்வி ஏன் என்று கேள்வியெழுப்புகின்றனர். வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு நல்லொழுக்கமும், இறையுணர்வும் இன்றியமையாதனவாகும். இவற்றைத் தரவல்லது அறநெறிக்கல்வி என்று கூறின் மிகையாகாது. நல்லொழுக்கமும், ஆன்மீக சிந்தனையும் நாம் பெற்றுவிட்டால் நாம் மனவுறுதியுடையவர்களாகி அறிவியல் கல்வியில் முன்னேறுவது சுலபமாக அமையும்.

இன்று சமுதாயத்தில் பெரும்பாலானோர் ஆன்மீக சிந்தனை அற்றவர்களாக செயற்படுவதனால் பயங்கரவாதமும், போரும்,

பஞ்சமாபாதகங்களும் தலைவிரித்து ஆடுகின்றன. இத்தகைய சமுதாய சீர்கேடுகளை அகற்றவல்லது அறநெறிக் கல்வியே. தர்ம சிந்தனையின்றி அறப்பண்பு குன்றியவர்களாக உள்ளவர்கள் பல்வேறு துறைகளில் முன்னேறினாலும் அவர்கள் மனிதர்களல்ல மரம் போல்வர் என வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளதை நாம் மனம் கொள்ள வேண்டும்.

அரம்போலும் கூர்மையரேனும் மரம் போல்வர்
மக்கட் பண்பு இல்லாதவர்'

என்ற திருக்குறளில் வள்ளுவர் தந்துள்ள அறநெறித்தத்துவம் என்றும் நாம் சிந்தனையில் இருத்த வேண்டியது ஒன்றாகும்.

எனவே மக்கட்பண்புள்ளவர்களாக வாழ வழிவகுப்பது அறநெறிக் கல்வி என்பதை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. நாம் அறநெறிக் கல்வியால் பொறுமை, அன்பு, இன்சொல் பேசுதல், பிறரை மதித்தல், இரக்கம், மனவுறுதி, இறைநம்பிக்கை, போன்ற மனித விழுமியங்களைப் பெற்றுக் கொள்கிறோம்.

ஆகவே பலசீர்கேடுகள் நிறைந்த இன்றைய சமுதாயத்தை சீர்செய்ய சரியான நிவாரணி அறநெறிக் கல்வியே ஆகும். இக் கல்வியின் மூலம் சீராகும் ஒரு சமுதாயம் அரசியல் பொருளாதார துறைகளில் முன்னேறி தன் நாட்டையும் உலகையும் சமாதானப் பூமியாக மாற்றும் என்பதில் ஐயமில்லை

வி. தஜீவா
தரம் - 11
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்.

# நான் விரும்பும் சிவசின்னம்.

சைவசமயத்தவர்களுக்குச் சிவசின்னங்கள் பிரதானமானவை. திருநீறு, உருத்திராக்கம், பஞ்சாட்சரம், சந்தனம், குங்குமம் ஆகியன. சைவசமயத்தவர் அணியும் சிவசின்னங்களாகும்.

இவற்றில் நான் தினமும் அணியும் சிவசின்னம் திருநீறாகும். இது விபூதி எனவும் பெயர் பெறும். பசுவின் சாணத்தைச் சுட்டுத் தயாரிக்கும் திருநீறு ஆலயங்களில் பிரசாதமாக வழங்கப்படுகிறது. இதைப் பூசிக் கொள்வதால் உடலும் மனமும் தூய்மையாகிறது.

நான் காலையும் மாலையும் இரவும் அணிவேன். இதைப் பூசும் போது சிவசிவ என்று சொல்லி மூன்று விரல்களால் நெற்றியில் அணியவேண்டும். திருநீறு நோயையும் போக்கும். திருஞானசம்பந்தர் பாண்டிய மன்னனின் வெப்புநோயைத் திருநீறு பூசி மந்திரமாவது.. எனும் தேவாரம் பாடி நீக்கினார். நாமும் தினமும் திருநீறு பூசி தூய்மையாக இருப்போம்.

ச. மாதுளா
தரம் -4
யா/இந்து ஆரம்ப பாடசாலை

# சைவம் காத்த தலைமகன்

ஆங்கில முடியின் ஆட்சியில் ஈழநன்னாட்டினிலே சைவமும் தமிழும் வன்மை இழந்து நலிவுற்றன. அக் காலத்தினிலே தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று.

எனும் வள்ளுவனின் கூற்றிற்கிணங்க இவ்வுலகில் தோன்றி சைவத்தினதும், தமிழினதும் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணம் செய்த தமிழ் மகன் நாவலர் பெருமான் ஆவார்.

ஈழ நன்னாட்டில் சைவமும், தமிழும் ஏற்றம் குன்றி நின்ற காலத்தில் ஆங்கிலேயரின் சலுகைக்கும், மிரட்டலுக்கும் அடிமையாகி பயத்தினாலும் சைவத்தைக் கைவிட்டு காலணியை வெளியே கழட்டி விட்டு கோயிலுக்கு சென்றவர் காலணியுடன் திருச்சபைக்குச் சென்றனர். 'சிவசிவ' என்று உச்சரித்த நாவெல்லாம் 'யேசுவே' என்றன. குத்து விளக்கு ஏற்றிய வீடுகளில் மெழுகுதிரி ஏற்றப்பட்டது. இவ்வாறு சைவமும், தமிழும் வலு இழந்து நின்ற காலத்திலே யாழ்ப்பாணத்து நல்லூரிலே ஞான சூரியனாய் அவதரித்தார் நாவலர் பெருமான். இவரின் வருகையால் சைவமும், தமிழும் புத்துயிரும், புதுவாழ்வும் பெற்றன.

கி.பி 1822ம் ஆண்டு மார்கழி மாதம் 18ம் திகதி கந்தப்பிள்ளைக்கும், சிவகாமி அம்மையாருக்கும் நன்மகனான நாவலர் பிறந்தார். இவரின் பிள்ளைத்திருநாமம் ஆறுமுகம். இருபாலை சேனாதிராச முதலியாரிடமும், நல்லூர் சரவணமுத்துப் புலவரிடமும் தமிழ் இலக்கணம், இலக்கியங்களை ஐயந்திரிபறக் கற்றுத் தேர்ந்தார். பீற்றர் பார்சிவல் துரையின் ஆங்கிலேய கலாசாலையில் ஆங்கிலம் கற்று ஆங்கிலப் புலமையும் பெற்றார். இவரின் அறிவாற்றலைக் கண்ட பீற்றர் பார்சிவல் பாதிரியார் இவரை தனது ஆங்கிலேய கலாசாலையின் (இன்று மத்திய கல்லூரி) ஆசிரியராக நியமித்தார். பாதிரியாரின் வேண்டுகோளுக்கிணங்க கிறிஸ்தவ வேதமாகிய பைபிளை தமிழில் மொழி பெயர்த்தார். இது மிகச் சிறந்த மொழி பெயர்ப்பாக அமைந்தது.

நாவலர் கிறிஸ்தவ பாடசாலையின் ஆசிரியராய் பணி புரிந்து வந்தபோது சைவ ஆசார சீலராகவே பள்ளி செல்வார். இதை கிறிஸ்தவ சமூகம் விரும்பவில்லை. மதமாற்றம் கண்டு கலங்கினார் நாவலர். பதவியைத் துறந்தார். சைவ, தமிழ் பணிக்குத் தன்னை அர்ப்பணம் செய்தார். இவர் இவ்விரண்டையும் தன் இரு விழிகள் எனக் கொண்டு வாழ்ந்து வந்தார். மாணவர்களைச் சேர்த்து அவர்களுக்கு சைவ நூல்களையும் , கருவி நூல்களையும் கற்பித்து வரலாயினார். இவரிடம் பாடம் படித்துப் புலமை எய்தியவர்கள் பலர்.

நாவலர் சைவம் வளர்க்க கையாண்ட முதல் படி சைவப் பிரசங்கங்கள் ஆகும். இவரின் சொற்பொழிவுகள் வாடும் பயிருக்கு வான் மழை போன்று சைவத்தின் வளர்ச்சிக்கு உதவின. ஊர்கள் தோறும் சொற் பொழிவுகள் ஆற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஊட்டினார். இதனால் மீண்டும் சைவம் கதிரவனைக் கண்ட தாமரை என மலர்ச்சி பெற்றது.

மாணவர்களுக்கு வேண்டிய புதிய தமிழ் நூல்களை வெளியிடவும், பழம்பெரும் தமிழ் நூல்களை பாதுகாக்கவும், அவற்றை அச்சிட்டு வெளியிடவும், விரும்பினார். அதனால் ஒரச்சியந்திரசாலையை நிறுவினார். புதிய நூல்கள் எழுதி வெளியிட்டார்.

நாவலர் யாழ் நகரிலும், இந்தியாவிலும் சொற்பொழிவுகளை ஆற்றினார். இவரது பேச்சு வன்மையைக் கண்ட திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு 'நாவலர்' எனும் பட்டம் வழங்கி கௌரவித்தது.

நாவலர் தமிழுக்கும் சைவத்துக்கும் அளப்பெரிய பணியாற்றி கி.பி 1879ம் ஆண்டு பரமாதி வருடம் கார்த்திகை 21ம் திகதி இறைபதம் அடைந்தார். சைவத்தையும், தமிழையும் அன்னியரிடமிருந்து காத்துத்தந்த நாவலர் பெருந்தகையை தமிழறிஞர் சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்கள்,

"நல்லைநக ராறுமுக நாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே ~ எல்லவரும்
ஏத்து புராணாகமங்கள் எங்கே பிரசங்கங்கள் எங்கே
அத்தனறிவெங்கே அறை"

என நாவலர் பெருமான் பணியை சுருங்கியபாட்டால் விரித்துக் கூறியுள்ளார்.

ம. பிரதீப்
தரம் ~ 11
யா/பரியோவான் கல்லூரி

# உலகில் சாந்தி, சமாதானம் நிலவ.........

'அறம், பொருள், இன்பம், வீடு' என்பன நான்கு புருடர்த்தங்கள் ஆகும். இதில் முதலில் வைக்கப்பட்டுள்ள 'அறம் முதன்மையானது. அறம் செய விரும்பு' என்று ஔவையார் அருளியுள்ளார். என்பதை நாம் அறிவோம். அற வாழ்வை வாழாமல் ஒருவன் இருப்பானாயின் அவன் பாதி மனிதனாகவே காணப்படுகின்றான். அவனது வாழ்வில் பல இடர்பாடுகள் ஏற்படும்.

இன்றைய சமுதாயத்தில் அறவாழ்வு சீர்குலைந்து மனித நேயத்திற்கு அப்பாற்பட்ட செயல்களே தலைவிரித்தாடுவதை நாம் பல சந்தர்ப்பங்களில் காணலாம். இதற்குக் காரணம் ஒருவன் சிறு பராயத்தில் அறநெறி வாழ்வியலை கற்கத் தவறியதே. இன்று பல இடங்களில் அறநெறிப் பாடசாலைகள் காணப்பட்டும் பலர் அதனைப் பயன்படுத்தாது உதாசீனம் செய்கிறார்கள். இதனால் தர்ம சிந்தனை, இறையுணர்வு, போன்ற அறப் பண்புகளையும், உணர மறுக்கின்றார்கள். இன்றைய உலகில் விஞ்ஞான வளர்ச்சி பெரிதும் வளர்ந்துள்ள போதும் ஆன்மீக வாழ்வியல் தளர்வடைந்துள்ளது. உலக அமைதி குன்றிப் பயங்கரவாதம் தலைவிரித்தாடி சமாதானத்துக்கு குந்தகம் விளைவிப்பதை காண்கின்றோம். இதற்குக் காரணம் அறநெறி வாழ்வியலை கடைப்பிடியாமை என்பது நன்கு புலனாகின்றது.

எனவே மாணவப் பருவத்தில் வாழும் நாங்கள் அறநெறிப் பள்ளியில் அளிக்கப்பட்ட வாய்ப்பைப் பயன்படுத்தி அறநெறிக் கல்வியைப் பெற்று மனித விழுமியங்களோடு கூடிய அறவாழ்விற்கு அத்திவாரம் இட வேண்டும். அப்பொழுது தான் நாம் பஞ்சமாபாதகங்கள் அற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்கி நாம் வாழும் நாட்டில் மட்டுமன்றி உலகிலேயே சாந்தி சமாதானம் நிலவ அடிகோலலாம். நிதானமான நிம்மதியான வாழ்வுக்கு அறநெறிக் கல்வி எமக்கு வழிவகுக்கும் என்பது ஐயமில்லை.

பு. தர்சிகா
தரம் ~ 11
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்

# ஆலயம் தானே அரன் எனத் தொழுவோம்

ஆலயம் தானே அரன் எனத் தொழுவோம் என்கிறது திருமுறை இறைவனே ஆலயம் எனத் தொழவேண்டிய நாம் ஆலயத்திற்கு எப்படிச் செல்ல வேண்டும். ஆன்மீக வாழ்வுக்கு மட்டுமன்றிச் சகலவித கலை வளர்ச்சிக்கும் கூட்டு வாழ்வு போன்ற சமுதாய விருத்திக்கும் ஆலய வழிபாடு விளங்கி வருகின்றது. ஆலயத்திற்கு நீராடி அனுட்டானங்களை நிறைவேற்றி தோய்த்து உலர்ந்த ஆடை அணிந்து சிவ சிந்தனையுடன் திருக்கோயிலைக் கண்டவுடன் தூலலிங்கம் ஆகிய கோபுரத்தை வணங்கிக் கொண்டு உள்ளே சென்று இரு கரங்களையும் கூப்பி

பத்திரலிங்கம் ஆகிய பலிபீடத்தை வணங்கி வழிபாட்டைத் தொடர வேண்டும்.

குருகுல வாசமாக இருந்து அறநெறி பயின்ற அன்றைய மரபின் வழியே திண்ணைப் பள்ளிகளும் அவற்றைத் தொடர்ந்து சமயக் கல்வியும் முக்கிய இடம் தந்தன. ஆலயம் என்பது ஒரு புனிதமான இடமாகும். ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஞ்காரமும் செய்து திருவைந்தெழுத்தை உச்சரித்த வண்ணம் ஆலயத்தை வலம் வருதல் (பிரதட்சணம்) வேண்டும்.

வலம் வரும் போது பூமியை நோக்கிய வண்ணம் சிவசிந்தனையிலே இலயித்து வலம் வருதல் வேண்டும். விநாயகரை ஒரு தரமும் சூரியனை இரண்டு தரமும், உமாதேவியாரையும் விஷ்ணுவையும் நான்கு தரமும், பிரதட்சணம் செய்தல் முறையாகும்.

சிவபெருமானை மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினைந்து, இருபத்தொரு முறையும் இயன்றளவு வலம் வருதல் சிறப்பானதாகும். துவாரபாலகரை வணங்கி சிவபெருமானை வணங்க வேண்டும். திருநந்திதேவரை வணங்கி அனுமதி பெற்று உள்ளே செல்ல வேண்டும்.

ஆலய வழிபாட்டில் முதலில் விநாயகரை தரிசித்து நெற்றியிலே மும்முறை குட்டிக் கொண்டு தோப்புக்கரணம் போட்டு தோத்திரம் கூறி வணங்கி அஞ்சலி செய்த வண்ணம் சிவபெருமானின் சந்நிதியை அடைந்து வணங்கி தேவாரம் திருவாசகம்ன் முதலிய அருட்பாக்களைப் பாடித்துதித்து அர்ச்சனை செய்ய வேண்டும். பின்பு உமாதேவியார், தடசணாமூர்த்தி, நடேசர், சுப்பிரமணியார், சமய குரவர்கள் பரிவார மூர்த்திகளை வணங்கி அர்ச்சகரிடம் விபூதிப் பிரசாதம் பெற்றுத் தரித்து சண்டேசுரரை மும்முறை கைதட்டி வணங்கி சிவதரிசனப் பலனை தந்து உதவுமாறு வேண்டி பலிபீடத்திற்கு இப்பால வந்து நமஸ்கரித்து வடக்குநோக்கி இருந்து இயன்றளவு பஞ்சாட்சர ஜெபம் செய்து கடைசியில் காவற்தெய்வமாகிய வைரவரை கும்பிட்டு செல்ல வேண்டும். சிவனுக்கும் நந்தி தேவருக்கும் இடையில் செல்ல கூடாது.

எம்மவரில் பலர் இன்று இத்தகைய விதிகளைக் கவனித்துக் கைக் கொள்வதில்லை. இதனால் ஆலய தரிசன பலன் பூரணமாக எமக்குக் கிடைப்பதில்லை. ஆகவே ஆகமங்கள் விதித்துள்ள இவ்விதிகளை அநுசரித்து ஆலயதரிசனம் செய்து இஷ்ட சித்திகளைப் பெற்று உய்வோமாக.

தி. தியாகரூபிகா
தரம் - 10
யா/ பெரியபுலம் மகா வித்தியாலயம்.

# தூயசிந்தையும் சமய அறிவும் தரும் ஓர் ஊடகம்

மாணவர்களின் சமய அறிவையும் ஒழுக்கத்தையும் வளர்க்கும் இடமாக அமைக்கப்பட்டவையேஅறநெறிப் பாடசாலைகள். இன்றைய இயந்திர உலகில் சின்னஞ் சிறியசிறார்களாகிய எம்மை நல்வழிப்படுத்தி மனஅமைதியை வழங்கும் இடமாக எவையுமே இருக்கவில்லை. சிறுவர்களுக்கு ஆத்மீக சிந்தனையைத் தூண்டும் இடமாக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையமே அறநெறிப் பாடசாலை ஆகும்.

நாம் அறநெறிப்பாடசாலைக்கு முதன்முதலாக 1999ம் ஆண்டு சென்றபோது அதன் ஆரம்பநாளில் பெரியவர் சிறியவர் என்றல்லாது அதன் தொடக்க விழாவுக்கு வருகை தந்த அனைவருமே ஒன்று கூடி அமர்ந்து திருமுறை ஓதினோம். இன்றும் அது எம்மால் மறக்க முடியாத ஒரு ஆரம்ப நாளாகும்.

பாய்விரித்து நிலத்தில் சப்பாணி கொட்டி இருப்பது மலையேறிப் போய்

விட்ட இன்றைய காலத்தில் நாம் சப்பாணி கொட்டியிருந்து பஞ்சபுராணத்தை இராகத்தோடு பாடும் வாய்ப்பைத் தந்தது அறநெறிப்பாடசாலை ஆகும். சைவசமயத்தவர்களின் அரும் பெரும்சொத்தாகிய திருமுறைகளை எமக்குப்பாடிக்காட்டியும் எம்மைப் பாடவைதத்தும் இவ் அறநெறிப் பாடசாலையே ஆகும்.

உலகத் தமிழ் மறையாம் திருக்குறளில் நாம் கட்டாயம் அறிந்திருக்க வேண்டிய எம்வாழ்வுக்கு மிகமிக அவசியமான அதிகாரங்களை எமது பள்ளி முதல்வர் திருமதி கு.ஷண்முகடாஸ் அவர்கள் அட்டைப்பலகையில் எழுதி வைத்து காட்சிப்படுத்துவார். நாம் அதனைப் பாடம் செய்து அதன் பொருள் அறிந்து படிக்க வேண்டும். திருக்குறளமனைப் போட்டி வைத்து அதன் பொருள், குறள் 2ம் கூற வேண்டும். இதன் மூலம் நாம் திருக்குறள் படிப்பதற்குரிய ஒரு உந்து சக்தியாக அறநெறி விளங்கியது எனி மிகையாகாது. இதைவிட பேச்சுப் போட்டி, பண்ணிசைப் போட்டிகளை நிகழ்த்தி எம்மை பல்துறையிலும் வளர்ச்சி காணவைத்தது அறநெறிப்பாடசாலை ஆகும். சமயப் பெரியார்களின் வரலாறுகள் சமயசம்பந்தமான கதைகள், சமயப்படங்கள் உதாரணமாக திருவிளையாடல், தசாவதாரம், சரஸ்வதி சபதம் போன்றவற்றை சொல்லித்தந்து மாணவர்களாகிய எமக்கு சமயசிந்தனையைத் தூண்டுவித்தது அறநெறியாகும்.

உண்மையான சமயசிந்தனையோடு வாழ்பவனுக்கு ஒழுக்கம் தானே வந்து விடும். இதனால் அவன் தவறு செய்வது குறைவு. அத்துடன் தான் தவறு செய்தால் தான் செய்தது தவறு என மனதால் உணர்ந்து திருந்திவிடுவான். இன்று எமது நாட்டில் நமது பிரதேசத்தில் எத்தனையோ பல அநியாயங்கள் அக்கிரமங்கள் நடக்க மிகமுக்கிய காரணம் ஒவ்வொரு மனிதனும் தன்னை அறியாமல் தன்நிலை அறியாமல் தன்கலாசாரம் பேணாமல் வாழ்ந்து கொண்டிருப்பதேயாகும். ஒவ்வொருவரும் தன்னை அறிந்து கொள்ள தூயசிந்தனை வேண்டும். தூயசிந்தனையை வழங்குகின்ற ஒரே ஒருமார்க்கம் அவனுடைய சமயமேயாகும்.

எனவே நாம் ஒவ்வொருவரும் கடவுள் சிந்தனையோடு தினமும் வாழ்ந்து வருவோமானால் எமக்கு வருகின்ற துன்பங்கள் நீங்கும். நாம் தவறுகள் செய்வதில் இருந்து தப்பிவிடுபடுவோம். நாகரீக உலகமாகிய 21ம் நூற்றாண்டின் மாணவர்களாகிய எமக்கு கடவுள் சிந்தனையையும் சமயம் பற்றிய ஒரு பரந்த அறிவையும் வழங்கும் ஒரே ஓர் ஊடகம் அறநெறிப் பாடசாலை என்பதில் ஐயமில்லை.

பே. மாலினி
தரம் 12
யா/வேம்படி மகளிர் கல்லூரி

# தொண்டாற்றி உய்வோம்.

நாற்பாதங்கள் நான்கு உண்டு. அதில் சரியை முதன்மை பெற்ற ஒன்றாகும். இத்தொண்டு நாம் இறைவனுக்கும் அவன் படைப்புகளுக்கும் உடலால் செய்வதாகும்.

நாம் செய்யும் சரியைத் தொண்டாவன கோயிலைக் கூட்டுதல், கோயில் விளக்கேற்றல், கோயிலைக் கழுவுதல், கோயிலில் நந்தவனம் அமைத்தல். கோயிலுக்கு மாலைகட்டுதல், கோயிலில் தீவெட்டி பிடித்தல், சாமரை வீசுதல், ஆலவட்டம் பிடித்தல், குடைபிடித்தல், கோயில் பாத்திரங்கள் கழுவுதல், கோயில் பிரகாரம் துப்புரவு செய்தல் என்பனவாகும். இவற்றைவிட இறைவன் அடியார்கள், வறியோர்,முதியோர் முதலியோர்க்குச் செய்வதும் தொண்டேயாகும்.

இன்றைய காலத்தில் இளைஞர்கள் சரியைத் தொண்டை மேற்கொள்வதை இழிவாகக் கருதுகிறார்கள்.

இத்தொண்டை மேற்கொண்டால் சாலோக முத்தியடையலாம். இத்தொண்டைச் செய்து முத்தியடைந்தவர்கள் திருநாவுக்கரசர், திலகவதியார் என்பவர்களாகும். பெரிய புராணம் சரியைத் தொண்டு செய்த நாயன்மார்கள் பலரைப் பற்றிக் கூறுகின்றது.

இளைஞர் சமுதாயம் சரியைத் தொண்டு செய்வதில் பின்னோக்கி செல்கிறது. இளைஞர் சமுதாயம் கலாசார சீரழிவாலும், வெளிநாட்டு கலாசாரத்தாலும், மூழ்கழிக்கப்படுகிறது. இதனால் சரியைத்தொண்டு இளைஞர் சமுதாயத்திலிருந்து நீங்கிச் செல்லும் வாய்ப்புண்டு. இளைஞர் சமுதாயத்திலே வாழும் நாம் சரியைத் தொண்டை விலக்கி விடாமல் சரியைத் தொண்டு பற்றிய மேன்மையை எம் நண்பர்களுக்கு அறநெறிக் கல்வியை கற்கும் நாம் அதுபற்றிய தெளிவை ஏற்படுத்துவோமாக.

"என்கடன்பணி செய்து கிடப்பதே" என்ற வாக்கிற்கிணங்க மானுடப் பிறவி எடுத்த நாம் அப்பிறவிப் பயன் பெறத் தொண்டாற்றி உய்தி பெறுவோம்.

பொ. சிவராசன்
தரம் - 8
யா/இந்துக்கல்லூரி

# விழுப்பம் தரும் ஒழுக்கம்

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என ஒழுக்கத்தின் மேன்மையை வள்ளுவப் பெருந்தகை தெளிவாகக் கூறியுள்ளார். ஒழுக்கத்தை வீட்டில் பெற்றோரும், பாடசாலையில் ஆசிரியர்களும், நாம் வாழும் சமுதாயத்தில் பெரியோர்களும் எமக்கு உணர்த்துகிறார்கள். இவ்வாறு நாம் மேன்மை தரும் ஒழுக்கத்தைப் பற்றி அறிந்து கொண்டாலும் எங்கள் அறநெறிப் பள்ளியில் எமக்கு அளிக்கப்படும் ஒழுக்கக்கல்வி எம்மை நல்லவர்களாக வல்லவர்களாக ஆக்க உதவுகிறது எனலாம்.

அறப்பள்ளியில் நாம் மேற் கொள்ளும் தியானம், நற்சிந்தனைப் போதனை, திருமுறைஓதல், மந்திரஜபம், திருக்குறள் மனனம் போன்றவை ஒரு ஒழுங்கான நற்பழக்க வழக்கங்களை எமக்கு தருகின்றன. இதனால் ஒழுக்கமும், ஒழுங்கும் நாம் இங்கே ஒருங்கே பெற்று இறைபக்தியோடு நம் அன்றாடக் கடமைகளை செவ்வனே செய்ய வழிபிறக்கிறது.

பு.ஷர்மிலன்
தரம் - 6
யா/பரியோவான் கல்லூரி.

# எங்கள் நூலகம் ஒரு நல்ல நண்பன்

வாசிப்பு மனிதனைப் பூரண மனிதனாக்குகின்றது என ஒரு ஆங்கில அறிஞர் கூறியுள்ளார். எங்கள் அறநெறிப் பாடசாலையில் ஒரு நூலகம் உண்டு. அது எங்களுக்கு மிகப் பயனுள்ளதாகவுள்ளது. இங்கு சிறுவர்கள் தொடக்கி பெரியவர்கள் வரை வாசிக்கத்தக்க நல்ல பல நூல்கள் உள.

நீதிக் கதைகள், கதை மலர்கள், அறநெறிக் கதைகள், ஆன்மீகக் கதைகள், பஞ்சதந்திரக் கதைகள், கிதோபதேசக் கதைகள், நாரதர் கதைகள், பாலர்களுக்கான இராமாயணம், பாரதம், ஔவையின் நீதிநூல்கள் முதலிய பலதரப்பட்ட தர்மம் போதிக்கும் நூல்கள் இங்கு உள.

நாங்கள் இந்த நூல்களை விரும்பிப் படிக்கின்றோம். பள்ளியில் இருந்தும் வாசிப்போம். வீட்டிற்கும் எடுத்துச் சென்றும் படிப்போம். இந்த அறநெறி நூல்களை வாசிப்பதால் நல்ல சிந்தனைகள் எம் மனதில் உருவாகின்றன. தர்மம் செய்தல், உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல், பெரியோரை மதித்தல், ஏழைகளுக்கு இரங்குதல், பலதரப்பட்ட சரியைத்தொண்டுளை ஆலயத்திலும், நாம் வாழும் சமூகத்திலும் செய்தல் போன்ற பல மனித விழுமியங்களை இந் நூல்களின் மூலம் நாம் கற்றுணர்ந்து செயல்பட முயல்கிறோம்.

நல்லதொரு நண்பன் போன்ற இந்நூலகம் இங்கு கற்க வரும் மாணவர்களுக்கு ஓய்வு நேரங்களில் நல்ல பொழுது போக்குச் சாதனமாகவும் அமைகின்றது.

வி.சிந்துயன்
தரம் - 9
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்

# பெரியோரை மதிப்போம் ..............

"அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்" என ஔவைப்பாட்டி கூறியுள்ளார். இவர்கள் இருவரும் நம் வீட்டில் நாம் அறிந்த முதல் பெரியோர்கள் நம்மை வளர்க்கும் இவர்களை மதித்து வணங்க வேண்டும். பாடம் சொல்லித் தருபவர் ஆசிரியர் எம்மைப் பெரியவர்களாக ஆக்கும் இவர்களை வணங்கி இவர்கள் கூறியபடி படித்து நல்லவர்களாக வரவேண்டும்.

அடுத்து முதியவர்களும் மதிக்கப்பட வேண்டியவர்கள். வீட்டிலுள்ள பாட்டா பாட்டி மற்றும் பெரியோர்களை மதித்து அவர்கள் கூறும் வேலைகளைச் செய்து கொடுக்கவேண்டும். பெரியோரைக் கனம்பண்ணவேண்டும் என எங்களுக்கு ஆசிரியர்கள் சொல்லித் தந்துள்ளனர். வயதான காலத்தில் எங்களை உதவிகேட்கும் முதியவர்களுக்கு உதவி செய்யவேண்டும். அவர்களிடம் அன்பு செலுத்த வேண்டும். அப்பொழுது தான் கடவுள் எங்களுக்கு கருணை காட்டுவார். பெரியவர்களின் மனம் நோகும்படி நாம் நடக்கக் கூடாது. அப்படி நடந்தால் எமக்கு தீமைகள் ஏற்படும். ஆகவே மூத்தோரைப் பெரியோரை மதித்துப் பணிந்து அவர்கள் சொல்வதைக் கேட்டு நடப்போம் நல்லவர்களாவோம்.

ப. ஜக்ஷனா
தரம் - 6
யா/ பெரியபுலம் ம. வி

# நான் அடைந்த பயன்

நான் படிக்கும் ஞானவைரவர் ஆலய அறநெறிப்பாடசாலையால் நல்ல பயன்களை அடைந்துள்ளேன்.

தியானம் செய்ய பழகியுள்ளேன். மந்திரங்களை செபிக்கவும், நற்சிந்தனை கற்று சொல்லவும் பயின்றுள்ளேன். இத்துடன் இங்கு நடைபெறும் போட்டிகளில் எல்லாம் பங்குபற்றி சான்றிதழ்களும் பரிசுகளும் பெற்றுக்கொண்டேன். பரிசளிப்பு விழா கலை நிகழ்சிகளிலும் வருடாவருடம் பங்குபற்றுவேன். எங்கள் கலைநிகழ்ச்சிகள் வேறு பாடசாலைகளிலும் இடம்பெற்றுப் பலரின் பாராட்டைப் பெற்றுள்ளன. எல்லாவகையாலும் இங்கு கற்கும் மாணவர்களுக்கு இது ஒரு பயனுள்ள பாடசாலையாகும்.

பு. பவனிதா
தரம் - 4
யாழ்/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை

# என்ன பயிலுகிறோம்.

அறநெறிப் பாடசாலையில் எங்கள் பாடசாலையில் படிக்காத பாடங்கள் படிக்கிறோம். தியானம் செய்யப் பழகுகிறோம். பண்ணிசை படிக்கிறோம். எல்லாக் கடவுளுக்கும் உரிய மந்திரங்களைச் சொல்லி வணங்கப் பழகுகின்றோம். வகுப்பு ஆரம்பமாக முன் கண்களை மூடித் தியானம் இருப்போம். பின் மந்திரங்கள் சொல்லுவோம். பின் பஞ்சபுராணம் படிப்போம். இதன் பின்பு சமயபாடம் தேவாரம் ஆகியன படிப்போம். திருக்குறள் மனனம் செய்வோம். திருக்குறளை இராகத்துடன் பாடக் கற்றுக் கொள்வோம்.

குருபூசைகளில் எல்லோரும் சேர்ந்து பஜனை செய்வோம்.

த. துகிர்சன்
தரம் -3
ஆனைக்கோட்டை யா/றோ.க.பா

# நான் விரும்பும் நூல்

நான் விரும்பும் நூல் திருக்குறளாகும். இது அறநெறி போதிக்கும் ஒரு நூலாகும். இதை இயற்றியவர் திருவள்ளுவர். இவரை பொய்யா மொழியார் என்றும் கூறுவர்.

திருக்குறள் 133 அதிகாரங்களைக் கொண்டது. ஒவ்வொரு அதிகாரத்திலும் 10 குறள்கள் உண்டு எல்லாமாக 1330 குறள்கள் உள்ளன. களவெடுக்கக் கூடாது படித்தாடி பொய் சொல்லக்கூடாது, பொறாமைபடக் கூடாது, படித்தபடி நடக்க வேண்டும், என்று பல போதனைகளைத் தருகின்றது. இதனால்தான் நான் திருக்குறளை விரும்புகின்றேன்.

ய. சிந்துஜா
தரம் - 3
கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை

# போட்டிகளும் பரீட்சைகளும்.

நான் படிக்கும் தலையாழி ஞானவைரவர் ஆலய அறநெறிப் பாடசாலையில் கற்பிக்கும் பாடங்களில் பரீட்சைகளும் போட்டிகளும் நடைபெறுகின்றன.

பண்ணிசைப்போட்டி, சமயஅறிவுப்பரீட்சை, திருக்குறள் மனனப் போட்டி, சகலகலாவல்லி மாலை மனனப்போட்டி, பேச்சுப் போட்டி ஆகியன நடைபெறும். நாங்கள் இவற்றில் பங்குபற்றுவோம். பெரிய மாணவர்களுக்கு தோரணம் கட்டல், கோலம் போடுதல், மாலைகட்டுதல் போட்டிகள் நடைபெறுகின்றன.

த. துவாரகன்
ஆண்டு~3
யா/இந்துஆரம்ப பாடசாலை

# எனக்குப் பிடித்தது.

எங்கள் அறநெறிப் பாடசாலையில் எனக்குப் பிடித்தது இங்கு நடைபெற்ற வாணி விழா சமயப்படிப்போடு விழாக்களும் இங்கு நடைபெறும். அதில் நவராத்திரி விழா சிறப்பானது. 9 நாட்களும் பாடசாலைப் பூசையறையில் தியானம் செய்வோம். நவராத்திரி தோத்திரங்கள் பாடுவோம். தேவிக்கு பூபோட்டு கும்பிடுவோம். பிரசாதம் தினமும் படைப்போம். எல்லோரும் பகிர்ந்துண்டு மகிழ்வோம்.

மு.காயத்திரி
ஆண்டு.~2
யா/இந்து ஆரம்பப் பாடசாலை

# அறப்பள்ளியில் .......

நான் இரு வருடங்களாக அறநெறிப் பாடவாலையில் கற்கின்றேன். இங்கு நான் முதலில் தியானம் இருப்பேன். பின்னர் தேவாரம் பாடுவேன். அதன் பின் திருக்குறள் பாடுவோம். வாணி விழாவில் நான் பங்குபற்றி பரிசு பெற்றேன். கலைவிழாவில் காவடி ஆட்டத்திலும் பங்கு பற்றினேன். சமயப் பரீட்சையும் எழுதி எங்கள் வகுப்பில் கூடிய புள்ளி பெற்றேன்.

சு. திவாகரன்.
ஆண்டு 2
யா/இந்து ஆரம்பப் பாடசாலை.

# நான் விரும்பியது

எங்கள் அறநெறிப் பாடசாலையில் பண்ணிசை, சமய அறிவு, நடனம், கோலம் போடல், மாலை கட்டல், தோரணம் பின்னல், நீதி நூல் மனனம், பேச்சுப் பயிற்சி எனப் பல பர்ங்களைப் படிக்கிறோம். இவற்றுள் எனக்குப் பிடித்தது நீதிநூல் மனனம். ஔவைப் பாட்டி இயற்றிய ஆத்திசூடி, நல்வழி, கொன்றை வேந்தன் ஆகியவற்றை இங்கு படிப்போம். பண்ணிசை ஆசிரியை இவற்றை இராகத்துடன் சொல்லித் தந்தார்.

இங்கு நீதிநூல் மனனப் போட்டி இடம் பெற்றது. அதில் நானும் பங்கு பற்றினேன். வேறு இடங்களில் நடைபெறும் நீதிநூல் போட்டிகளிலும் நாங்களும் பங்கு பற்றி வெற்றி பெற்றுள்ளோம்.

சி. ஜெயசக்தி
தரம் ~ 3
யாழ்/இந்து ஆரம்பப் பாடசாலை



## நாளைய உலகின் நல்லவராக...

- தொன்நெறி அறங்கள் துலக்கிடும் ஞான உண்மைகள் அனைத்தும் உணரவேண்டும்.
- அன்புடன் அருளும் அமைந்த நல்வாழ்வை அறநெறி வழியில் அமைக்க வேண்டும்.
- தூய்மையும் தியானமும் சொல்லிய ஞானியர் வாய்மையின் வழிகளை வளர்க்க வேண்டும்.
- ஆலயம் போற்றி நல்நோன்புகள் நோற்கவும் அடியனாய்ப் பணி செய்யவும் அறிய வேண்டும்.
- சாலவும் இறைநாமம் கூடியே பாடவும் சாஸ்திர ஆற்றலும் பெற வோண்டும்.
- நாளைய உலகின் நல்லவர் என்ற நாமம் பெற்றிட தீதும் நன்றும் யாதெனத்தேறிட நல்லவை கற்றுத்தெளிய வேண்டும்.
- அறநெறி இறைபணி என அனைவரும் உணர்ந்து அற வாழ்வு வாழ அத்தன் திருவடி நித்தம் பணிவோமாக..

Printed by: Yakiny Printers, 620, K.K.S Road, Narchchimar Kovilady, Jaffna.